பக்கங்கள் நான்கு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 5-00

சுடர் 9 திருவள்ளுவர் ஆண்டு 2025 ஆடி 09 திங்கட்கிழமை (25 07 1994) UTHAYAN A Lively National Tamil Daily கதிர் 239

சாளரம்

ஜூன் - ஜூலை மாத இதழ் வெளிவந்து விட்டது

எங்கும் கிடைக்கும்

இம்மாத இதழ் சிறப்பிதழாக அதிக பக்கங்களுடன் வெளிவந்துவிட்டது.

சாளரம்

இளையோர் திங்கள் இதழ்

# பொ.ம.ஐ.மு. ஆட்சிக்கு வந்தவுடன் யுத்தத்துக்கு ஒரு முடிவு கட்டுவோம்!

## சு.கவின் வானொலி உரையில் தமிழ்ப் பிரமுகர் அறிவிப்பு

கொழும்பு, ஜூலை 25

"பொது மக்கள் ஐக்கிய முன்னணி ஆட்சிக்கு வந்ததும் வடக்கு, கிழக்கு யுத்தத்துக்கு உடன் முடிவு கட்டுவோம்.

"தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்கு பேச்சுவார்த்தை மூலம் அரசியல் தீர்வு காண்போம்".

— இவ்வாறு ஸ்ரீ. ல. சு. க. பிரமுகரான சட்டத்தரணி ரி. சி. ராஜரத்தினம் பொது மக்கள் ஐக்கிய முன்னணியின் சார்பில் இலங்கை வானொலியில் நேற்று தேர்தல் பிரசார உரை நிகழ்த்துகையில் அறிவித்தார்.

இவர், க. க. தேசியப்பட்டியல் எம். பியாக [illegible] பட்ட நாடாளுமன்றத்தில் பணிபுரிந்தவரும் 'முன்னாள் உயர்நீதிமன்ற நீதியரசருமான திரு. ரீ. டபிள்யு. ராஜரத்னத்தின் ஒரே புதல்வராவார்.

அவர் தமது பேச்சில் சொன்னதாவது:

1977 ஆம் ஆண்டுக்கு முன்னர் வடக்கே வாழும் தமிழரின் பொருளாதார நிலையை எப்படியிருந்தது என்பது அனைவருக்கும் தெரியும். அந்த நிலை இன்று இல்லை.

வட பகுதி மக்களின் பொருளாதாரம் இன்று பாழ்பட்டு விட்டது. வாழ்க்கையே அவர்களுக்குச் சுமையாகிவிட்டது.

1977 க்கு பின்னர் தொடர்ச்

(4ஆம் பக்கம் பார்க்க)

## தன் தீர்வுத் திட்டத்தை சு. க. பகிரங்கப்படுத்தாதது ஏன்?

### ஐ. தே. க. அரசு அதனை கையாள்வதைத் தடுக்கவாம்

"நாம் மேற்கொள்ளவுள்ள இனப்பிரச்சினையின் அரசியல் தீர்வுக்கான வழிவரைவை அரசாங்கம் கையாண்டுவிடும் எனக் கருதியே பொதுமக்கள் ஐக்கிய முன்னணியின் தேர்தல் விஞ்ஞாபனத்தில் அதை குறித்து விவரங்களை வெளியிடவில்லை".

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் செயற்குழு உறுப்பினரான பேராசிரியர் ஜி. எல். பீரிஸ் பொதுமக்கள் ஐக்கிய முன்னணியின் தேர்தல் விஞ்ஞாபனம் தொடர்பாக நடத்திய பத்திரிகையாளர் மாநாட்டில் இவ்வாறு தெரிவித்தார்.

இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காண்பதற்கு நாம் விசேட முன்னுரிமை அளிப்போம். பூகோள, இன, சமூக வாழ்நிலை அடிப்படையிலேயே இத்தீர்வு அமையும் என்றும் அவர் கூறினார். (க)

## தேர்தலைக் கண்காணிக்க சர்வதேச அவதானிகள் குழு

### 10 ஆம் திகதி கொழும்பு வரும்

கொழும்பு, ஜூலை 25

ஒகஸ்ட் 16 ஆம் திகதி நடைபெறவிருக்கும் பொதுத் தேர்தலை கண்காணிக்க சர்வதேச அவதானிகள் அழைக்கப்பட்டுள்ளனர். அவர்கள் எதிர்வரும் 10 ஆம் திகதி கொழும்பு வந்து சேருவர்.

அவதானிகளை அழைப்பதற்கான ஆலோசனைகளை அரசியல் கட்சிகளின் செயலாளர்களும், சுயேச்சை குழுக்களின் தலைவர்களும் அவர்களின் பிரதிநிதிகளும் ஏகமனதாக ஏற்றுக் கொண்டுள்ளனர்.

தேர்தல் ஆணையாளர் சத்திரானந்த டி. சில்வா இவ்வாறு தெரிவித்தார்.

இக்குழுவில் நீதிபதிகள், சிரேஷ்ட சட்டத்தரணிகள், கல்விமான்கள், தேர்தல் அதிகாரிகள், ராஜதந்திரிகள், பத்திரிகையாளர்கள், நிர்வாகிகள் ஆகியோர் இடம் பெறுவர்.

அவர்கள் தத்தமது நாடுகளின் பிரதிநிதிகளாக இலங்கை சர்வதேச அவதானிகள் என்ற முறையில் செயற்படுவர்.

அவர்கள் அரசியல் கட்சிகளினதும், சுயேச்சைக் குழுக்களினதும் பிரதிநிதிகளை சந்தித்து விபரங்களையும்

(4 ஆம் பக்கம் பார்க்க)

### பொறளையில் நடைபெற்ற ரணிலின் கூட்டத்தில் குறைந்தளவு மக்களே!

கொழும்பு, ஜூலை 25

கொழும்பு, பொறளையில் நேற்று மாலை பிரதமர் ரணிலும் சபாநாயகர் முஹாமதுவும் கலந்துகொண்ட ஐக்கிய தேசியக் கட்சியின் பிரசாரக் கூட்டத்தில் மிகக் குறைவான மக்களே கலந்து கொண்டனர் என்றும் —

பிற்பகல் 3.30 மணிக்கு ஆரம்பமாகவிருந்த ஆக்கூட்டம், ஆட்கள் சேராததினால் இரவு 7 மணிக்கே ஆரம்பமானதாகவும் பி. பி. ஸி. தெரிவித்தது.

பொறளையில் ஐக்கிய தேசியக்கட்சிக் கூட்டத்துக்கு மக்கள் திரண்டு வந்து கலந்து கொள்வது வழமை என்றும் —

நேற்று விடுமுறை நாளாக இருந்தும் காலநிலை சீராக இருந்தும் — மக்கள் ஐ. தே. க. கூட்டத்தில் கலந்து கொள்ளாதது குறிப்பிடத்தக்க சம்பவமாக அரசியல் வட்டாரங்களில் கணிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

கொழும்பு மாவட்டத்திலே போட்டியிடும் 23 ஐ. தே. க. வேட்பாளர்களில் பிரதமர், சபாநாயகருடன் டாக்டர் கருணாசேன கொடித்துவக்கு மட்டுமே மேற்படி கூட்டத்தில் கலந்து கொண்டனர்.

### எதிர்ப்புத் தெரிவிக்கவே மக்கள் பகிஷ்கரிப்பு!

கொழும்பு, ஜூலை 25

கண்டியில் காண நிகழ்வுகளுக்கு எதிர்ப்புத் தெரிவிக்கு முகமாகவே மக்கள் பொறளையில் நேற்று நடந்த ஐ. தே. க. பிரசாரக் கூட்டத்தை பகிஷ்கரித்தனர் என்று — [illegible] சார்பற்ற — அபயகுரிப் பிரமுகர் லியனகே [illegible] பெரேரா என்பவரை மேற்கோள்காட்டி பி.பி.ஸி. தெரிவித்தது.

பொதுவாக நாட்டின் பல பகுதிகளிலும் ஐ. தே. க. கூட்டங்களில் கலந்து கொள்ளாமல் பகிஷ்கரித்து வருகின்றனர் என்றும் —

ஆட்சியில் மாற்றத்தை மக்கள் குறிப்பாக இளந்தலைமுறையினர் [illegible] அரசு மேலும் [illegible] விரும்பவில்லை என்றும் [illegible] ஒரு ஷெல் விழுந்து வெடித்தது. (உ-ஐ-15-51)

## கொழும்பில் கொலை முயற்சி சு. க. பிரமுகர் தப்பினார்!

கொழும்பு, ஜூலை 25

கொழும்பு மாவட்டத்தில் முன்னாள் சுதந்திரக் கட்சி எம். பி நிமால் சிறிபால டி சில்வாவுக்கு காயமேற்படவில்லை. அதனைத் தொடர்ந்து கலவரம் ஏற்பட்டதாகவும் கூறப்பட்டது. அந்த பஸ் ஹிராண் நிச்சர்ஸ் என்ற பெயருடைய மாகான சபை உறுப்பினருக்குச் சொந்தமானது எனத் தெரிவிக்கப்பட்டது.

கலவரத்தின்போது விதியில் அசிட் திராவகமும் வீசப்பட்டது. அதன் காரணமாக அந்த இடத்தில் நின்றுகொண்டிருந்த குழந்தை ஒன்றின் சட்டை பூரணமாக எரிந்து போனதாகக் கூறப்பட்டது.

இந்த சம்பவமான கொலை முயற்சிச் சம்பவம் என்று பி. பி. ஸி. தெரிவித்தது. )உ-ஏ-6)

### கம்பஹா மாவட்டத்தில் அதிக விருப்பு வாக்குகளை சந்திரிகாவே பெறுவார்

#### ஒப்புக்கொள்கிறார் அமைச்சர்

எதிர்வரும் பொதுத்தேர்தலில் கம்பஹா மாவட்டத்தில் பொதுமக்கள் ஐக்கிய (கூட்டணி) பிரதித் தலைவி சந்திரிகா மிகப்பெரும்பான்மையான விருப்பு வாக்குகளைப் பெறுவார்.

ஆளும் கட்சி அமைச்சர் ஜோசப் மைக்கல் பெரேரா தமது ஆதரவாளர்களுக்கு அளித்த பேட்டி ஒன்றில் இதனை ஒப்புக் கொண்டார்.

இதே வேளை — ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் முன்னாள் எம். பி. ஜெயராஜ் பெர்னாண்டோபுள்ளே அளித்த பேட்டி ஒன்றில் —

கம்பஹா மாவட்டத்தில் பொதுமக்கள் ஐக்கிய முன்னணி 13 ஆசனங்களைக் கைப்பற்றும் என்றார்.

கம்பஹா மாவட்டத்தில் மொத்தம் 18 ஆசனங்கள் உள்ளன. (ஏ)

## கைதான மீனவர் மண்டைதீவு முகாமில்!

யாழ்ப்பாணம், ஜூலை 25

மண்டைதீவுக் கடற் பகுதியில் வைத்து படையினரால் கைது செய்யப்பட்ட மீனவர் மண்டைதீவு இராணுவ முகாமில் உள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த செவ்வாய்க்கிழமை குருநகரில் இருந்து சென்று மண்டைதீவுக் கடலில் மீன் பிடித்துக் கொண்டிருந்த மரிய தாஸ் சந்திரகுமார் என்ற மேற்படி மீனவ இளைஞர் படையினரால் கைது செய்யப்பட்டிருந்தார் என்பது தெரிந்ததே.

தமிழகத்துக்கு அகதியாகச் சென்று கடந்த பெப்ரவரி மாதம் அகதிகளுக்கான ஐ. நா. தூதரகத்தின் ஏற்பாட்டில் யாழ்ப்பாணம் திரும்பிய இந்த மீனவரை கைது செய்தமை குறித்து அந்த அமைப்பின் பிரதிநிதிகள் பாதுகாப்பு அமைச்சு அதிகாரிகளுடன் பேச்சு நடத்தினார்கள்.

இந்த இளைஞன் மண்டைதீவு முகாமில் வைத்து விசாரிக்கப்படுவதாகவும் —

இவரை விரைவில் விடுதலை செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் —

பாதுகாப்பு அமைச்சு அதிகாரிகள் அகதிகளுக்கான ஐ. நா. தூதரகத்துக்கு அறிவித்துள்ளனர். (உ-3)

### "ஐயோ! மாரி ஓடி வாங்கோ" பெண்ணின் அவலக்குரலே வதந்தியாக மாறியது!

யாழ்ப்பாணம், ஜூலை 25

கொட்டடி — நாவாந்துறைப் பகுதி மக்கள் நேற்று முன்தினம் இரவு, தங்கள் இருப்பிடங்களை விட்டு மூட்டை முடிச்சுகளுடன் பதற்றத்துடன் ஓடியதற்கு காரணமாக இருந்தது பெண்மணி ஒருவர் எழுப்பிய அவலக் குரலே!

தமது சகோதரி கிடக்க மயக்கமுற்றதைக் கண்டு அந்தப் பெண்மணி, தனக்கு ஏற்பட்டுள்ள துயரச்சியில் "ஐயோ மாமி! ஐயோ மாமி! ஐயோ மாமி ஓடிவாங்கோ" என்று எடுத்த வீடு உறவினர்களுக்கு குரலில் அழைத்தார்.

அந்த அவலக் குரல் அயல் வீட்டாருக்கு "ஐயோ ஆமி, ஐயோ ஆமி ஐயோ ஆமி ஓடிவாங்கோ" என்று கேட்டால்

அயல் வீட்டுக்காரர்களும் ஓடத்தொடங்கி இராணுவம் வந்து விட்டதாக நினைத்துக் கொண்டு 'ஐயோ ஆமி, ஐயோ ஆமி" என்று கத்தியவாறு [illegible] முடிச்சுகளுடன் வீடுகளை விட்டு ஓடினர்!

அந்த வேளையில் இரவு 7 15 மணியளவில் ஹெலிகொப்டர் ஒன்றும் நாவற்குழியில் ஆங்கு [illegible] பறந்து

(4 ஆம் பக்கம் பார்க்க)

### தெற்கு பத்திரிகையாளர் நையப்புடைக்கப்பட்டார்

மாத்தளையைச் சேர்ந்த டி. பீ. எல்லவெ என்ற பத்திரிகையாளர் பொதுமக்கள் ஐக்கிய முன்னணியின் கூட்டத்துக்குச் சென்று விட்டுத் திரும்புகையில், மாத்தளை பிரதேச சபையின் உப தலைவராலும் மற்றும் சிலராலும் வழிமறித்துத் தாக்கப்பட்டார்.

பத்திரிகையாளரிடமிருந்து நாட்குறிப்பு மற்றும் கமராவும் அபகரிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

தாம் முறைப்பாடு செய்ய பொலீஸ் நிலையம் சென்றபோது, தம்மைத் தாக்கியவர்கள் ஏற்கனவே செய்த முறைப்பாட்டின் மீது பொலீஸார் தம்மை வைத்து செய்து நீதிமன்றத்தில் ஆஜர் செய்தனர் என்றும் —

தமது முறைப்பாட்டின் மீது பொலீஸார் நடவடிக்கை எடுக்கவில்லை என்றும் அப் பத்திரிகையாளர் தெரிவித்துள்ளார். (உ-ஏ-6)

### யாழ். மாவட்டத்தில் விண்ணப்பித்த பட்டதாரி பயிலுநர் ஆசிரியர் வெளி மாவட்டங்களுக்கு!

யாழ்ப்பாணம், ஜூலை 25

யாழ். மாவட்டத்தில் இருந்து பயிலுநர் ஆசிரியர் பதவிக்கு விண்ணப்பித்த பட்டதாரிகளுக்கு வெளி மாவட்டங்களில் நியமனம் வழங்கவட - கிழக்கு மாகாண சபை கல்வியமைச்சு முடிவு செய்துள்ளது.

யாழ். மாவட்டத்தில் பயிலுநர் பட்டதாரி ஆசிரியர்களுக்கு வெற்றிடம் இல்லாததாலும் —

ஏற்கனவே பட்டதாரி பயிலுநர் ஆசிரியர்களாக வெளி மாவட்டங்களில் பணிபுரிவோர் யாழ். மாவட்டத்துக்கு இடமாற்றம் கோருவதாலும் —

மாகாண கல்வியமைச்சு மேற்கண்ட முடிவை எடுத்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

யாழ். மாவட்டத்தில் இருந்து [illegible] பயிற்சிக்கு விண்ணப்பித்தவர்களில் இந்த மாவட்டத்திலேயே நியமிக்கப்படுவார்கள் என்று முன்னர் அறிவிக்கப்பட்டிருந்தது.

யாழ். மாவட்டத்தில் இருந்து 350 பட்டதாரிகள் நேர் முகப் பரீட்சை மூலம் தெரிவு செய்யப்பட்டுள்ளனர் நியமனம் வழங்குவதற்காக இவர்களின் பெயர்ப்பட்டியல் மாகாண கல்வியமைச்சுக்கு அனுப்பப்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது. (உ-3)

### முச்சந்தி முரசு

உந்தப் பேச்செல்லாம் தேர்தல் முடிஞ்சவுடனை காத்தோட போயிரும் பாருங்கோ!

### தனியார் மருத்துவக் கல்லூரி மருத்துவ மாணவர் விடயம்: நாளை மூதவை ஆராய்வு

யாழ்ப்பாணம், ஜூலை 25

தனியார் மருத்துவக் கல்லூரியான வடக்கு — இலங்கை மருத்துவக் கல்லூரியில் மாணவர்களாக இருந்த 43 பேரை யாழ். மருத்துவ பீடத்தில் போதனைக்கு அனுமதிக்கும் விவகாரம் குறித்து யாழ். பல்கலைக்கழக மூதவை நாளை ஆராயவிருக்கிறது.

இந்த விவகாரம் குறித்து பல்கலைக்கழக மருத்துவபீட கலந்தாலோசனை ஆராய்ந்து அறிக்கை ஒன்றை மூதவைக்கு சமர்பித்திருந்தது.

நாளை மூதவை கூடும் போது இந்த விவகாரம் குறித்து சாதக, பாதக நிலையை ஆராய்ந்து யாழ் பல்கலைக்கழக பேரவைக்கு அறிக்கை சமர்ப்பிக்கும் எனத் தெரிவிக்கப்பட்டது. (உ-3)

### கனேடிய பல்கலை. உதவியுடன் இங்கு கம்பியூட்டர் நிலையம் அமைக்க அனுமதி மறுப்பு

யாழ் மாவட்டத்தில் உள்ளோர் கம்பியூட்டர் பயிற்சி பெறுவதற்கு வசதியாக பல லட்சம் ரூபா செலவில் கம்பியூட்டர் நிலையம் ஒன்றை இங்கு அமைப்பதற்கு கனேடிய சர்வதேச பல்கலைக்கழகம் முன்வந்த போதிலும் —

அதற்கு அனுமதி வழங்க ஸ்ரீலங்கா அரசு மறுத்து விட்டது.

பதினைந்து கம்பியூட்டர்களைக் கொண்ட ஒரு நிலையத்தை அமைத்துத் தரவே கனேடிய பல்கலைக்கழகம் முன்வந்தது.

ஆனால் அரசின் அனுமதி கிடைக்காததால் இந்த நிலையத்தை அமைக்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

இதே வேளை — கனேடிய சர்வதேச பல்கலைக்கழகம் வழங்கிய நிதி மூலம் அமைக்கப்பட்ட கம்பியூட்டர் நிலையம் ஒன்று எதிர்வரும் 28 ஆம் திகதி மட்டக்களப்பில் ஆரம்பிக்கப்படவிருக்கிறது. (உ-3)

### மண்எண்ணெய் எடுத்துவர திணைக்களங்களுக்குத் தடை

யாழ்ப்பாணம், ஜூலை 25

யாழ். மாவட்டத்தில் உள்ள அரச நிறுவனங்களுக்கு தமக்குத் தேவையான மண்எண்ணெய்யை முன்னர் போன்று நேரடியாகக் கொழும்பிலிருந்து எடுத்து வரமுடியாது.

அதற்கு புனர்வாழ்வு புனரமைப்பு அமைச்சு தடை விதித்துள்ளது.

நிறுவனங்கள் தங்களுக்குத் தேவையான மண்எண்ணெய்யை இனிமேல் யாழ். அரச அதிபரிடமே பெறவேண்டும் என்று நிறுவனங்களுக்கு அறிவுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளதாம். (உ-3)

### ஒவ்வொரு குடும்பத்துக்கும் 4 லீற்றர் ம. எண்ணெய்

"மாஹோ" கப்பல் மூலம் எடுத்து வரப்பட்டுள்ள மண்எண்ணெய் பங்கீட்டு அடிப்படையில் குடும்பத்துக்கு 4 லீற்றர் வீதம் வழங்கப்படவிருக்கிறது.

இந்த மண்எண்ணெய் நேற்று பொ. ப. நோ. கூ. சங்கங்களுக்கு வழங்கப்படுவதாகவும் —

ப. நோ. கூ. சங்கங்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ள மண்எண்ணெய்யை எடுத்து மக்களுக்கு விநியோகம் செய்யுமாறும் — ப. நோ. கூ. சங்கங்கள் கேட்கப்பட்டுள்ளன. (உ-3)

noolaham.org | aavanaham.org
noolaham.org | aavanaham.org foundation

## சின்னஞ் சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

அடைவகை உகந்த சிக்கி, பிரமாண, பாவடிக்கிறேஸ், கொலில், கபாக்கிளர், வெள்ளை சாரிபல் லிலிகொழி முட்டைகளும், இரண்டு வாரம் நிரம்பிய குஞ்சுகளும் உடன் விற்பனைக்குண்டு. 684, நாவற்குழி வீதி (நாவலர் றோட்). ஐந்துசந்தி குமரன் பதிப்பகத்தின் அண்மையில் யாழ்ப்பாணம். (7545)

### ஆனந்தம் சீயாக்காய்

எமது உடம்புக்கு இரசே பிரதானம். ஆகவே சித்தமருத்துவ முறைப்படி தயாரிக்கப் பெற்ற ஆனந்தம் சீயாக்காய் பவுடர் என்று கேட்டுவாங்கி பயன் பெறவும். [7486]

## பஸ் சேவை நேரம் நீடிப்பு

வல்வெட்டித்துறை, ஜூலை 25

பருத்தித்துறை தனியார் போக்குவரத்துச் சேவையின் 750ஆம் இலக்க பஸ்சேவை நேரம் இவ்வாரம் முதல் நீடிக்கப்பட்டுள்ளது.

பருத்தித்துறையில் இருந்து யாழ்ப்பாணம் செல்லும் மாலை நேரம் 5-30 மணியாகவும் யாழ்ப்பாணத்தில் இருந்து பருத்தித்துறை செல்லும் காலை நேரம் 7மணியாகவும் மாற்றம் செய்யப்பட்டுள்ளது என அறிவிக்கப்படுகிறது. (வ-155)

## டாக்டர்கள் வேலை நிறுத்த முன்தீர்ப்பு

கொழும்பு, ஜூலை 25

ஜெயவர்த்தனபுர ஆஸ்பத்திரி டாக்டர்களின் கோரிக்கைகளுக்கு நியாயமான தீர்வு காணப்படாவிடில், அவர்களுக்கு ஆதரவு தெரிவித்து இன்று முதல் வேலை நிறுத்தம் செய்யப்போவதாக கொழும்பு பெரியாஸ்பத்திரி டாக்டர்கள் தீர்மானித்துள்ளனர்.

அரசாங்க வைத்திய அதிகாரிகள் சங்கத்தின் பேச்சாளர் ஒருவர் இதனைத் தெரிவித்தார் (இ-எ-6)

## 508 தேர்தல் முறைப்பாடுகள்

கொழும்பு, ஜூலை 25

தேர்தல் நியமனப் பத்திரங்கள் தாக்கல் செய்யப்பட்ட கடந்த 11 ஆம் திகதியில் இருந்து கடந்த புதன்கிழமை வரை தேர்தல் தொடர்பாக இடம்பெற்ற சம்பவங்களின் எண்ணிக்கை 508 என்று பொலீஸ் தலைமையகத் தேர்தல் பிரிவு தெரிவித்துள்ளது

இக்காலத்தில் மூன்று கொலைகளும் இரண்டு தீவிரச் சம்பவங்களும் இடம்பெற்றன என்று சிரேஷ்ட பொலீஸ் அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (இ-எ-6)

## சுயதொழில் ஊக்குவிப்பு கடன்

யாழ்ப்பாணம், ஜூலை 25

வறுமைக்கோட்டிற்கீழ்வாழும் மக்களை சுயதொழிலில் ஈடுபடவைத்து அவர்களது வாழ்க்கைத்தரத்தை மேம்படுத்துமுகமாக பனையில் 15 குடும்பங்களுக்கு சுயதொழில் ஊக்குவிப்பு கடன் வழங்கப்பட்டது.

கடந்த 14 ஆம் திகதி பனை வட்டச்செயலகத்தில் ஒரு குடும்பத்திற்கு தலா 10 ஆயிரம் ரூபா வீதம் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தால் இக்கடன் உதவி வழங்கப்பட்டது. (ந)

## திருத்தம்

19-7-1994 உதயன் இதழில் வெளியான யாழ் மத்திய கல்லூரியின் 175 ஆவது ஆண்டு நிறைவு விழா விளம்பரத்தின் இறுதியில் —

அன்பளிப்பு V.T. & சன்ஸ் என்பதற்குப் பதிலாக V.T.S. சன்ஸ் எனத் தவறுதலாக வெளிவந்துவிட்டதை — வருந்தத்துடன் தெரிவித்துக்கொள்கிறோம்.

விளம்பரதாரர்

## 6 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்: 18 — 04 — 1966

மறைவு: 25 — 07 — 1988

**கதிரவேல் ஜெயக்குமார்**

அன்னாரின் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கும்:

தாய், சகோதர, சகோதரிகள், மைத்துனிமார், மைத்துனர், மருமக்கள், பெறாமக்கள்.

உரும்பிராய் மெதடிஸ்து. (32080)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி



**அமரர் பொன்னையா தியாகேசன்**

(முன்னாள் முகாமையாளர், கிபோன்ஸ் ஏறிறுமதி நிறுவனம்)

அன்னையின் மடியில்: 31 — 12 — 1938

இறைவன் அடியில்: 25 — 06 — 1994

அன்பான அரவணைத்து, ஆதரவு காட்டி... பண்பின் பிறப்பிடமாய்... பார் போற்ற வாழ்ந்து... பாசத்தின் சிகரமாய் ஒளியீட்டி..... வழிகாட்டி நெறித்தீர் எமை தவிக்கவிட்டே சென்று விட்டீர் பற்றுக் கோட்டினைத் தவிக்கின்றோம்-உம் நினைவாக் தேற்ற வகையின்றி, மாற்று வழியின்றி-

துடிக்கின்றோம்!

சொல்ல வொரு வார்த்தையில்லை சொந்தங்கள் தவிக்கின்றது!

சொல்லியழுது விட்டால் நம் துயரம் மாறிடுமோ!

25 - 06 - 1994இல் கொழும்பில் சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவரின் இரங்கல் கிரிகைகளின் நேரடியாக வருகை தந்தோருக்கும், அனுதாபத்தந்தி கண் அனுப்பியோருக்கும், பல வகைகளிலும் உதவிகளைப் புரிந்தவோருக்கும் எமது நன்றியை எத்தெரிவித்துக்கொள்கின்றோம்.

இன்று நடைபெறும் அந்தியேட்டிக் கிரியைகளில் கலந்து கொள்ளுமாறு அன்பாக அழைக்கின்றோம்.

ஆத்ம சாந்திக்காக பிரார்த்திக்கும்:

அன்பு மனைவி, பிள்ளைகள், உறவினர்கள்.

மீசாலை வடக்கு, மீசாலை. (சி-8776)

## 11-ம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு: 20 — 05 — 1954

உதிர்வு: 25 — 07 — 1983

**சிவசுப்பிரமணியம் சிவநாதன்**

(T. S. K. V. Bros, எஞ்சுதுறை)

எம்மை ஆறாத்துயரில் ஆழ்த்தி மீளாத்துயில் கொண்ட எங்கள் அன்புத் தெய்வமே! நீங்கள் எம்மை விட்டுப் பிரிந்து வருடம் பதினொன்று கடந்தாலும் உங்கள் அன்பு உருவமும் நினைவுகளும் என்றும் எங்கள் இதயங்களிலிருந்து பிரியாது! உங்கள் ஆசிகள் அன்றுபோல் என்றும் எங்களுக்கு அருள்வீர்களாக.

தாய், சகோதரங்கள், மைத்துனர்மார், மருமக்கள்.

"திருவேரகம்" வேலணை மேற்கு, வேலணை - 8

## செப்டெம்பரில் முகாமைத்துவ பயிற்சி நெறி

தென்மராட்சி, ஜூலை 25

பாடசாலைநிர்வாகம்தொடர்பான முகாமைத்துவ குழு உறுப்பினர்களுக்கான முகாமைத்துவ பயிற்சி நெறி எதிர்வரும் செப்டெம்பர் மாதம் யாழ். கல்வி வலயத்தினால் நடத்தப்படவுள்ளது.

தென்மராட்சி கல்விக்கோட்டத்தில் இப்பயிற்சி நெறிக்கு கூடுதலானோர் விண்ணப்பிக்கும் பட்சத்தில் இப்பயிற்சி நெறியை சாவகச்சேரியில் நடத்த உத்தேசித்திருப்பதாக தெரிவிக்கப்பட்டது. (எ-171)

## செல்லக்கிளி நினைவு தினம் அனுஷ்டிக்கப்பட்டது

யாழ்ப்பாணம், ஜூலை 25

தமிழீழ விடுதலைப் புலிகளின் வரலாற்றுச் சிறப்புமிக்க திருநெல்வேலித் தாக்குதலின்தும் அதில் வீரச்சாவைத் தழுவிக் கொண்ட லெப்ரினன்ட் செல்லக்கிளியினதும் 11 ஆம் ஆண்டு நிறைவு தினம் நேற்றுமுன்தினம் யாழ்ப்பாணத்தில் நினைவுகூரப்பட்டது.

திருநெல்வேலித் தாக்குதலில் வீரச்சாவைத் தழுவிய லெப்ரினன்ட் செல்லக்கிளி வீரச்சாவைத் தழுவிய இடத்திலும், கல்வியன் காட்டிலும் நேற்றுக் காலை அஞ்சலி நிகழ்ச்சிகள் நடைபெற்றன

திருநெல்வேலியில் லெப்டினன்ட் செல்லக்கிளியின் நினைவாலயத்திற் கடற்புலிகள் அரசியல்துறைப் பொறுப்பாளர் மூர்த்தி மாலையை அணிவித்தார்.

ஈகைச் சுடரை திருநெல்வேலித் தாக்குதலில் பங்கு பற்றிய விடுதலைப் புலிகளின் முகவெஸ்தரான அப்பையா அண்ணை ஏற்றிவைத்தார்.

கல்வியன் காட்டில் ஈகைச் சுடரை அப்பையா அண்ணை ஏற்றி வைக்க மூர்த்தி அவர்கள் லெப்டினன்ட் செல்லக்கிளியின் படத்திற்கு மாலை அணிவித்தார்.

இந்த நிகழ்வுகளில் விடுதலைப் புலிகளின் முக்கிய உறுப்பினர்களும் பெரும் எண்ணிக்கையான மக்களும் குழுமியிருந்தனர். (இ-4)

### தேர்தல் முடியும் வரை

## மக்கள் குரல் சேவையை இடைநிறுத்த முயற்சி

கொழும்பு, ஜூலை 25

ஈ. பி. டி. பி. இயக்கத்தினரால் இலங்கை வானொலியில் ஒலிபரப்பப்படும் "மக்கள் குரல்" நிகழ்ச்சியை பொதுத் தேர்தல் முடியும் வரை இடைநிறுத்துவதற்கு ஒலிபரப்புக் கூட்டுத்தாபன அதிகாரிகளுடன் பேசி தாம் முயற்சி எடுப்பதாக தேர்தல் ஆணையாளர் சந்திரானந்தா டி சில்வா தெரிவித்துள்ளார்.

இந்த வானொலி சேவை மூலம் எதிர்க்கட்சிகளை அவதூறு செய்யும் விதமாக பிரசாரங்கள் செய்யப்படுவதாக எதிர்க்கட்சி பிரதிநிதிகள் தெரிவித்த குற்றச் சாட்டுக்கு பதிலளிக்கையிலேயே தேர்தல் ஆணையாளர் இதனைத் தெரிவித்தார்.

எதிர்க்கட்சி பிரதிநிதிகள் கடந்த வெள்ளி மாலை தேர்தல் ஆணையாளரை சந்தித்து தமது பாதுகாப்பு ஏற்பாடுகளை குறித்து கலந்துரையாடினர்.

அவ்வேளை ஈ. பி. டி. பி. யினரின் இந்த வானொலிச் சேவை குறித்தும் அங்கு பிரஸ்தாபிக்கப்பட்டது. அதற்கு பதிலாகவே தேர்தல் ஆணையாளர் முன்கண்டவாறு தெரிவித்தார்.

வன்முறையாளர்களின் அச்சுறுத்தல் உள்ள தொகுதி களிலோ வேட்பாளர்களுக்கு தேவையான பாதுகாப்பு வழங்கப்படும் என்றும் தேர்தல் ஆணையாளர் சந்திரானந்தா டி சில்வா எதிர்க்கட்சி பிரதிநிதிகளிடம் உறுதியளித்தார். [ஐ 6]

### எம்பிலிப்பிட்டியவில்

## மீட்கப்பட்ட எலும்புகள் ஆடு, மாடுகளுடையனவா?

### டி.பிக்கு எழுந்துள்ள சந்தேகம்

கொழும்பு, ஜூலை 25

எம்பிலிப்பிட்டிய பகுதியில் எலும்புகூடுகள் இருப்பதாக எதிரணியினர் பிரசாரம் செய்து வருகின்றனர். அவை ஆடு, மாடுகளின் அலுப்புக் கூடுகளா அல்லது வேறு எவற்றினதும் எலும்புக் கூடுகளா என்பது தெரியவில்லை. இவ்வுலகில் எண்ணிலடங்கா மக்கள் இறந்து போகின்றனர். ஒவ்வொரு அங்குல இடைவெளியிலும் புதைகுழிகள் காணப்படுகின்றன என்பதை நாம் மறந்து விடக்கூடாது.

— இவ்வாறு கூறினார் ஜனாதிபதி விஜேதுங்க:

கொலன்ன தொகுதி தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் மேடை இடிந்து விழுந்த சம்பவத்தின் பின் உரையாற்றுகையிலேயே ஜனாதிபதி இவ்வாறு குறிப்பிட்டார்:

மேடை இடிபாடுகளுக்குள் இருந்து ஜனாதிபதி ஆபத்து ஏதுமின்றி எழுந்ததைக் கண்டதும் கூட்டத்துக்கு வந்திருந்தோர் ஆரவாரம் செய்தனர் என்றும் —

அதனையடுத்து ஜனாதிபதி அமைச்சர்கள் நந்தா மதிநீயூ, காமினி அத்துகோறளை, கனநிதி மில் விஜேரிங்க ஆகியோர் சகிதம் அருகில் உள்ள வீடொன்றுக்கு கூட்டிச் செல்லப்பட்டார் என்றும் கூறப்படுகிறது.

தொடர்ந்து ஒலிபெருக்கி பொருத்தப்பட்ட வாகனம் ஒன்று கொண்டு வரப்பட்டு, அதன் மூலம் ஜனாதிபதி விஜேதுங்க உரையாற்றினார். (உ)

## வியாழன் மீதான மோதல் வெள்ளியுடன் முடிந்தது!

லண்டன், ஜூலை 25

கடந்த ஒருவார காலமாக விண்வெளியில் நடந்து வந்த விநோத நிகழ்ச்சி முடிவடைந்தது.

ஷூமேக்கர் லெவி-9 வால் நட்சத்திரத்தின் கடைசி துண்டு கடந்த வெள்ளிக்கிழமை பிற்பகல் 1-42 மணிக்கு வியாழன் கோள் மீது மோதியது.

"டபிள்யூ" எனப் பெயரிடப்பட்ட அந்த கடைசி துண்டு வியாழன் கோளின் மீது ஏற்கனவே ஏற்பட்ட பெரும் பள்ளத்தின் அருகே மோதியது.

வால் வெள்ளியின் எதிரிய 21 துண்டுகள் கடந்த வாரம் முழுவதும் வியாழன் கிரகத்தின் மீது அடுத்தடுத்து மோதியதைத் தொடர்ந்து, அக் கிரகத்தின் ஒரு பகுதியில் ஒரு விதமான பரவி வருவதாக விஞ்ஞானிகள் தெரிவிக்கின்றனர்.

மோதல்கள் பற்றி கிடைத்த படங்களை நுணுக்கமாக ஆராய்ந்த பின்னரே இவ் விஞ்ஞானிகள் இதனை அறிவித்தனர். [illegible] சுமார் 6 ஆயிரம் கிலோ மீற்றர் விஸ்தீரணம் வரை [illegible] விஞ்ஞானிகள் தெரிவித்தனர். (ஐ-எ-ஐ)

## இன்று நாடுபிளவுபடாமலா உள்ளது? ஜனாதிபதியிடம் சு. க. எம். பி கேள்வி

கொழும்பு, ஜூலை 25

ஐக்கிய தேசியக்கட்சி ஆட்சியின் கீழ்தான் நாடு பிளவுபட்டுள்ளது. தெற்கு மக்கள் வவுனியாவுக்கு அப்பாற் போகமுடியாத அளவுக்கு நாடு பிளவுபட்டுள்ளதே.

சு. க. முன்னாள் எம். பி ஜெயராஜ் பெர்னாண்டோபுள்ளே முன்கண்டவாறு தெரிவித்திருக்கின்றார்.

நாட்டைப்பிரிக்க சுதந்திரக் கட்சி தலைமையினான பொதுமக்கள் ஐக்கிய முன்னணி முயற்சித்து வருவதாக ஜனாதிபதி விஜேதுங்கா தெரிவித்த குற்றச்சாட்டுக்குப் பதிலளிக்கையில் அவர் முன்கண்டவாறு குறிப்பிட்டார்.

"ஜனாதிபதியின் குற்றச்சாட்டு எமக்கு ஆச்சரியத்தைத் தரவில்லை. வங்குரோத்து அரசியலிருந்து இது போன்ற கண்டனங்கள் தான் வரும். நாடு இப்போது பிளவுபடாமலா உள்ளது? தென்பகுதி மக்கள் வவுனியாவுக்கு அப்பாற் செல்லமுடியாத நிலை இருக்கும் போது, எப்படி நாடு பிளவுபடாமல் இருக்கிறது என்று அரசினால் கூற முடியும்?" — என்று அவர் கேட்டார்;

பிரேமதாஸா ஆட்சிக்காலத்திலேயே நாடு பிரிக்கப்பட்டு விட்டது. தற்போதைய அரசின் கீழ் அது இன்னும் தொடர்கிறது என்றும் அவர் தெரிவித்தார். (எ)

## யாழ் ஆஸ்பத்திரிக்கு போட்டோஸ்ரற் கருவி

யாழ். போதனா வைத்திய சாலையின் தேவைக்கென கொழும்பில் இருந்து நிழற்பிரதி (போட்டோஸ்ரற் கருவி) எடுக்கும் கருவி ஒன்று வந்து சேர்ந்துள்ளது

இதனைவிட — றோனியோ கருவி ஒன்றையும் கொழும்பில் இருந்து எடுத்து வருவதற்கு வைத்தியசாலை நிர்வாகம் நடவடிக்கையை மேற்கொண்டு வருகிறது.


## பொருட்காட்சி

**இரட்சணிய சேனை இல்லம்**

**SALVATION ARMY HOME**

✱ தையல் ✱ பூ வேலை
✱ ஜிசிங் ✱ சிகை அலங்காரம்

இடம்: இரட்சணிய சேனை இல்லம் கண்டி வீதி, கைதடி

காலம்: 26 — 07 1994. 27 — 07 — 1994
காலை 9-00 மணி தொடக்கம்
மாலை 5 00 மணி வரை

புதிய மாணவர்கள் 30 — 07 — 1994 திகு முன் பதிவு செய்து கொள்ளவும்

மேலதிக விபரங்களுக்கு நிர்வாகியுடன் தொடர்பு கொள்ளவும்.

- நிர்வாகி.

[32051]


## கண்ணீர் அஞ்சலி

வண்ணார் பண்ணையைச் சேர்ந்த இரத்தினசபாபதி இராசம்மாவின் அன்பு மகன்

**A. R. ஸ்ரீகிருஷ்ணமூர்த்தி**

அவர்களின்

("ஈழத்து அரசு" — மெல்லிசைக் கலைஞர், யாழ். மாநகரசபை ஊழியர்)

மரணச் செய்தியை கேள்வியுற்ற அவரின் அன்புத் தாயாரும், அன்புச் சகோதரிகள் திருமதி மங்கையர்க்கரசி - எதிரவேலு, திருமதி கங்காதேவி - ஜெகதேவன் திருமதி கமலநாயகி - தேவராஜா ஆகிய நாம் எமது பாசமிகு அண்ணாவின் இழப்பினால் நெஞ்சுருகிக் கண்ணீர் சிந்துகின்றோம். அவருக்கு எமது அஞ்சலிகள். அன்னாரின் ஆத்மா சாந்தி அடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

தாய், சகோதரிமார்

163, கே. கே. எஸ். றோட், கொக்குவில். (32078)

## கண்ணீர் அஞ்சலி

**A. R. ஸ்ரீ கிருஷ்ணமூர்த்தி**

அவர்களுக்கு

மெல்லிசை மன்னா! மறைந்தனையோ!

வண்ணை கலைவாணர் நாடக மன்றத்தின் வளர்ச்சிக்கு தணையுரித்த எங்கள் அன்புக் கலைஞர் அவர்களின் மறைவுக்கு வருந்துகிறோம். அன்னாரின் குடும்பத்தார்க்கு எமது ஆழ்ந்த துயரத்தைத் தெரிவிக்கின்றோம்.

வண்ணை கலைவாணர் நாடக மன்றம்

யாழ்ப்பாணம். (32079)

## ஓராண்டு நினைவில்

உதயம்: 10 — 10 — 1944

அஸ்தமனம்: 04 — 08 — 1993

**சபாபதி இராசநாயகம் (சின்னண்ணை)**

(சிவா கபே உரிமையாளர்)

திதி: 25 — 07 — 94

எல்லோரும் போற்றும் உத்தமராய் வாழ்ந்த எங்கள் அன்புத் தந்தைக்கு கண்ணீர் பூக்களை காணிக்கையாக்குகின்றோம்.

ஸ்ரேசன் றோட், சுன்னாகம்.

மனைவி, பிள்ளைகள். (32077)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

உதயன்
292/2 நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்

## ஜூலை வாரத்தின் இரு பக்கங்கள்

ஜூன், ஜூலை, ஓகஸ்ட் மாதங்கள் இலங்கையின் இரத்தக்களரி மாதங்கள். வன்செயல்களுக்குப் பெயர் எடுத்த மாதங்கள்.

1956ஆம் ஆண்டு ஜூன் மாதம் இந்தாம் திகதி தனிச் சிங்களச் சட்டம் கொண்டு வரப்பட்டபோது ஆரம்பமான பெரிய அளவிலான இனவாத வன்செயல்கள், இப்போது கடந்த நான்கு வருடங்களாக நீடிக்கும் யுத்தத்தில் வந்து முடிந்திருக்கிறது.

தமிழர்களை அச்சுறுத்த வேண்டும், அவர்களுக்குப் பாடம் புகட்டி அவர்தம் உரிமைப் போராட்டத்துக்கு முற்றுப்புள்ளி வைக்க வேண்டும் என்று சிங்கள அரசியல் தலைவர்கள் நினைத்த போதெல்லாம் தமிழர்களைத் தாக்கி இரத்தக் களரியை உண்டாக்குவது வெகு சகஜமானதாக இருந்தது. 1958, 1977, 1981, 1983 இனத் தாக்குதல்கள் அத்தகையவையே.

சிங்களப் பேரினவாதத் தலைவர்கள் தமது கைக்கூலிகள், காடையர்கள், குண்டர்களை ஏவித் தமிழ் மக்களுக்கு எதிராக நடத்திய இன அழிப்புத் தாக்குதல்களில், 1983 ஜூலை தாக்குதல், அதற்கு முன்னர் நிகழ்ந்த தாக்குதல்களைவிட மிகக்கொடூரமான தாகும். கறுப்பு ஜூலை என்று உலகமே முத்திரை குத்தும வகுக்குக் காட்டு மிராண்டித் தனமான தாக அமைந்தது.

1983 ஜூலை இறுதி வாரத்தில் சிங்கள அரசியல்வாதிகளே தமது படைகளைக் கொண்டு மறைமுகமாக நடத்தியது எனது ஏற்கனவே நிரூபிக்கப்பட்ட ஒன்று.

ஆம். 1983 இல் சட்ட பூர்வ மற்ற முறையில், மறைமுகமாக தமிழர்களைக் கொன்று இராணுவம், இப்போது யுத்தம் என்ற பெயரில் சட்டரீதியாகவே, வெளிப்படையாகவே பெரும் எண்ணிக்கையில் தமிழர்களைக் கொன்று குவிக்கிறது. குண்டு வீச்சு என்றும் எறிகணை வீச்சு என்றும் கற்றிவனைப்பு. தேடுதல் என்றும் கடந்த நான்கு வருடங்களில் மட்டும் இருபதாயிரத்துக்கும் மேற்பட்ட தமிழர்களைக் கொன்று குவித்து விட்டது அரச இராணுவம்.

இப்போதைய யுத்தத்துக்குக் காரணம் அமைந்த 1983 கறுப்பு ஜூலை அரக்கத் தனத்தின் நிறுப்பிடத்தான நாள்களான ஜூலை 25, 27 ஆம் திகதிகள் எப்போதும் நினைவில் நிற்பவை தமிழர்கள் சுவிரக்கமின்றி துடிக்கப் பலத்தைக் கொன்றொழிக்கப்பட்ட நாள்கள்.

இதே ஜூலை இறுதி வாரத்தினை ஒரு நாளை மாதமாகக் கொண்டு, அதன் அடுத்த பக்கத்தைப் பார்த்தாக். அந்த வாரம் தமிழர்களின் உரிமைப் போராட்டத்தில் புதிய சகாப்தம் ஒன்றின் ஆரம்பமாக அமைகிறது.

ஈழத் தமிழர்களின் ஆயுதப் போராட்டம் வரப்போகிறது என்பதனைக் கோடிட்டுக் காட்டிய வரலாற்றாண்டு 1983 ஜூலை 23. அரசியல் பயங்கரவாதத்துக்கு எதிராகத் தமிழர்கள் காத்திருந்த படையாக இருந்தோனும், தக்கபதிலடி கொடுப்பார்கள் என்பதனை அரச படைகளுக்கு திருநெல்வேலியில் வைத்து இடித்துரைத்த நாளும் அதுவே.

இதே ஜூலை மாதத்திற்கு சென்ற வருடம் 25ஆம் திகதி மல்லிகைத் தீவையில் விடுதலைப் புலிகள் வீரகாவியம் படைத்தார்கள். தமது தாயகத்தில் மிகக் குறைந்த இழப்புடன் எழுபதுக்கும் மேற்பட்ட இராணுவத்தினரைக் கொன்று, ஐம்பது லட்சம் ரூபாவுக்கும் அதிகம் பெறுமதியான நவீன ஆயுதங்களைக் கைப்பற்றினர்.

பத்து வருடங்களில் தமிழர்களின் ஆயுதப் போராட்டம் எத்தனை மடங்கு சக்தி பெற்றுவிட்டது என்பதனை, மல்லிகைத்தீவை வெற்றி, உலகத்துக்கு எடுத்துக் காட்டியது. ஸ்ரீலங்கா அரசை, அதன் படைகளை நடுநடுங்க வைத்தது!

ஜூலை மாதத்தில் இறுதி வாரம் தமிழர்களைப் பொறுத்த வரை, அழிவு காணும் ஒருபக்கத்தையும், போராட்ட வெற்றி காணும் அடுத்த பக்கத்தையும் கூடிய நாளும்!

## மாவீரர் நினைவஞ்சலி கூட்டம்

தமிழீழ விடுதலைப் போரில் தங்கள் இன்னுயிர்களைத் தியாகம் செய்த மாவீரர்கள் வரிசையில் புதிதாக மேலும் தா.ம. சந்தையா உட்பட 16 மாவீரர்களையும் நினைவு கூரும் வகையில் புதிதாக கிழக்கு ஸ்ரீ விக்னேஸ்வரா வீனையாட்டுக் கழகம் நடத்தும் நினைவஞ்சலிக் கூட்டமும் கலை நிகழ்ச்சிகளும் இன்று திங்கட்கிழமை இரவு 8 மணிக்கு கழக மைதானத்தில் நடைபெறவுள்ளன. இந்நிகழ்ச்சிகளுக்கு புலிகளின் பல முக்கிய பிரமுகர்கள் கலந்து கொண்டு நினைவஞ்சலி உரை நிகழ்த்துவார்கள். (எ)

சந்திரிகா பிரதமர் என்ற முடிவு காரணமாக

# பொ.ஐ.முன்னணிக்கு எதிரான தேர்தல் களத்தில்

# கடைசித் துரும்பையும் இழந்த நிலையில் டி.பி.

கொழும்பு, ஜூலை 25

பொது மக்கள் ஐக்கிய முன்னணியின் தலைமைப் பீடம், பிரதமர் பதவிக்கு சந்திரிகா குமாரதுங்கவுக்கு வெளிப்படையாக தெரிவு செய்துள்ளதாக, பிரதமர் பதவி குறித்து முன்னணியில் பிளவை ஏற்படுத்தும். தமது தந்திரோபாயத்தில் கடைசித் துரும்பையும் இழந்த நிலையில் ஆளும் ஐக்கிய தேசியக் கட்சி இருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

தென்பகுதி அரசியல் நிலைவரம் பற்றி 'ராவய' ஆசிரியர்

தென்பகுதி அரசியல் நிலைவரம் பற்றிய தமது மதிப்பீட்டில் ராவய பத்திரிகை ஆசிரியர் விக்டர் ஐவன் முன்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

பொது மக்கள் ஐக்கிய முன்னணி எதிர்வரும் தேர்தலில் வெற்றியீட்டி, ஆட்சிக்கு வரும் பட்சத்தில், முன்னணியின் தலைமைப்பீடத்தில் பிரதமர் பதவி குறித்து பிளவை ஏற்படுத்த ஐக்கிய தேசியக் கட்சி திட்டமிட்டிருந்தது என்றும் —

முன்னணியின் தலைவர்கள் கடந்த வியாழன் கூடி, 'பிரதமர் பதவிக்கு சந்திரிகா, ஜனாதிபதி பதவிக்கு சிறிமாவோ' — என்று தீர்க்கமாக முடிவு செய்ததன் மூலம் அத்திட்டம் முறியடிக்கப்பட்டுள்ளதாவும் தெரிவிக்கப்படுகிறது.

தற்போதுள்ள அரசமைப்புச் சட்டத்தின்படி பிரதமரை ஜனாதிபதியே நியமிப்பார்.

தேர்தலில் ஐ.தே.க. தோல்வியுறின், பெரும்பான்மையுடன் வெற்றியீட்டும் பொதுமக்கள் ஐக்கிய முன்னணியின் சார்பில் சந்திரிகாவுக்குப் பதிலாக சிறிமாவோவை பிரதமராகப் பதவி யேற்கும்படி, அழைப்பதற்கு ஜனாதிபதி விஜேதுங்க திட்டமிட்டிருந்தார் என்றும் —

முன்னணியின் தலைவர்கள் அன்னமயில் கூடி பிரதமர், யார் ஜனாதிபதி என்பதை தெளிவாகத் தீர்மானித்துக் கொண்டதன் மூலம், தேர்தலின் பின்னர் ஏற்படவிருந்த குழப்ப நிலை தவிர்க்கப்பட்டு விட்டது என்றும் 'ராவய' ஆசிரியர் விக்டர் ஐவன் தெரிவித்தார். (எ-6)

## பொதுத்தேர்தல் தொடர்பாக

## அரசு நடத்திய கணிப்பிலும் எதிரணிக்கே சாதக நிலை!

எதிர்வரும் பொதுத் தேர்தல் தொடர்பாக அரசு நடத்திய கணக்கெடுப்பு ஒன்றின்படி பொது மக்கள் ஐக்கிய முன்னணிக்கே வெற்றி வாய்ப்பு அதிகம் எனத் தெரிவந்துள்ளதாக பி.பி.சி சிங்கள சேவையில் தெரிவிக்கப்பட்டது.

மேற்படி கணிப்பீட்டை நடத்திய குழுவினர் தமது அறிக்கையை ஜனாதிபதியிடம் சமர்ப்பித்துள்ளனர்.

அந்த அறிக்கையின்படி — மக்கள் மத்தியில் பொதுமக்கள் ஐக்கிய முன்னணிக்கு உள்ள ஆதரவு 60 வீதமாக அதிகரித்திருப்பதாகவும் — ஐக்கிய தேசியக் கட்சிக்குள்ள ஆதரவு 37 வீதமாக குறைந்துள்ளதாகவும் தெரிய வந்துள்ளது.

இதேவேளை — தாங்கள் தோல்வியடையோம் என்ற எண்ணம் ஐ.தே.க. சார்பில் பிரசார நடவடிக்கைகளில் ஈடுபட்டுவரும் முக்கிய பிரமுகர்களை உளவியல் ரீதியாகப் பாதித்துள்ளதாக 'ராவய' பத்திரிகை ஆசிரியர் விக்டர் ஐவன் தெரிவித்துள்ளார். (ஐ-6)

## தேர்தல் சட்டம் ஆகஸ்ட் 23 வரை அமுலாகும்!

கொழும்பு ஜூலை 25

எதிர்வரும் பொதுத் தேர்தலில் வாக்களிப்பு முடிவடைந்த தினத்திலிருந்து ஒரு வார காலம் வரை தேர்தல் சட்ட விதிகள் அமுல் செய்யப்படும் என்று தேர்தல் ஆணையாளர் அறிவித்துள்ளார்.

இக்காலப் பகுதியில் வேட்பாளர்கள் மற்றும் கட்சிகளை நடத்துவது தடை செய்யப்பட்டிருக்கும் என்றும் தெரிவிக்கப்படுகிறது. (எ)

## விறகு வேட்டையில் கழிபுரம் மக்கள்

விறகுக்கு பெரும் பட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது, கழிபுரம் பிரதேசப் பகுதியில் அன்றாடத் தேவைக்கு வேண்டிய விறகுகளை பெற்றுக் கொள்ள பனைமரக் காடுகளை சென்று முள் மரங்கள் மற்றும் காய்ந்த சருகுகளை எடுத்து வருகின்றனர். நல்ல தண்ணீர் பெறுவதற்கு செல்வது போல் இன்று விறகு எடுப்பது பலரது முக்கிய வேலையாக உள்ளது. இப்பகுதியில் நிருட்டு போகின்ற பொருட்களில் விறகு முதன்மை இடம் வகிக்கின்றது. (எ-28)

## ஆயுதங்கள் மக்கள் பார்வைக்கு

தென்மராட்சி, ஜூலை 25

நாகதேவன்துறை, பூநகரி கூட்டுப்படை முகாம் மீது நடத்தப்பட்ட தாக்குதலை நடவடிக்கையின் போது அள்ளப்பட்ட ஆயுதங்களின் ஒருபகுதி 21 ஆம் திகதி சாவகச்சேரி பஸ் நிலையத்தில் பொது மக்களின் பார்வைக்கு வைக்கப்பட்டன. (எ-117)

## 52 ஆண்டுகளுக்குப் பின் கிடைத்த காதல் கடிதம்

லண்டன் ஜூலை 25

இரண்டாம் உலக மகாயுத்தத்தில் போது திருமணம் புரிந்த பிரிட்டிஷ்வாசி ஒருவர் தனது மனைவி எழுதிய காதல் கடிதத்தை 52 ஆண்டுகளுக்குப் பின்னர் பெற்றுக்கொண்டார்.

பிரிட்டிஷ் பத்திரிகைகள் இதனைத்தெரிவித்தன.

வட இங்கிலாந்தின் ஷெப்பிரடன் கார்ட் என்ற இடத்தைச் சேர்ந்த வோல்டர் மேசன், வயது 74, என்ற வயோதிபருக்கே இந்த அனுபவம் கிட்டியது.

1942 ஆம் ஆண்டு இவரதுத் திருமணம் புரிந்த மனைவி வெரா அனுப்பிவைத்த கடிதமே 52 ஆண்டுகளுக்குப்பின்னர் வயோதிபரை வந்தடைந்தது.

வெரா யுத்தக் கப்பல்களில் பணிபுரிந்த தனது கணவருக்கு இக்கடிதத்தை எழுதியிருந்தார். திரு. மேசன் பல கப்பல்களில் மாறி மாறிப் பணிபுரிந்தநாள் கப்பல் மாறிக்கொண்டிருப்பதால் கடிதம் அனுப்பப்பட்ட இறுதியில் கடற்படைக்கடிதம் பிரிக்கும் பகுதிக்கு அனுப்பப்பட்ட இக்கடிதம் பல ஆண்டுகள் தொடப்படாமல் இருந்தது.

1986 ஆம் ஆண்டு மேசனுடன் கப்பலில் பணி புரிந்த றேஒல் கோபி என்பவருக்கு அனுப்பப்பட்டது.

ஆனால் கணவருக்கு கடிதத்தை எழுதிய மனைவி வெரா 1986 ஆம் ஆண்டு இறந்து விட்டதால் றேஒல் கடிதத்தை மேசனுக்கு அனுப்பி வைக்கவில்லை பின்னர் மறந்து விட்டார்.

இறுதியில் அண்மையில் இக்கடிதம் பற்றிய ஞாபகம் வந்ததும் மேசனுக்கு அனுப்பிவைத்தார். (எ)

## எதிரணி ஆட்சிக்குவரின்

# காலிமுகத்திடலில் கங்காரு நீதிமன்றம்

## பிரதமர் ரணில் அச்சம் இது

கொழும்பு, ஜூலை 25

பொதுமக்கள் ஐக்கிய முன்னணி பதவிக்கு வந்தால், ஐக்கிய தேசியக்கட்சியினர் காலிமுகத் திடலில் வைத்து 'கங்காரு' நீதிமன்ற பாணியில் கொல்லப்படும் ஆபத்து உண்டு.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெஹிவளையில் நடந்த ஐ.தே.க. பிரசாரக் கூட்டத்தில் பேசியபோது முன்கண்டவாறு அச்சம் தெரிவித்தார்.

நாடாளுமன்றக் குண்டு வெடிப்புச் சம்பவத்தில் முதல் எதிரியாகக் குற்றஞ்சாட்டப்பட்ட கஜித் குமார் மீது அரசு கடுமையாக நடந்து கொள்கிறது. சட்டத்திட்டங்களுக்கமைய எமது அரசு நடத்திய காரணத்தினால் தான் அவர் இன்று கம்பஹா மாவட்டத்தில் இங்கை முறிப்பாகு முன்னணியில் சார்பில் போட்டியிடுகின்றார்— "என்றும் பிரதமர் கூறினார். (எ)

## கொலன்னாவையில்

## மேடை இடிந்த சம்பவம் ஐ.தே.கவுக்கு அபசகுனம்

### கிராமப்புற மக்களின் கருத்து

ஜனாதிபதி அமர்ந்திருந்த மேடை இடிந்து விழுந்த சம்பவத்தை தென்பகுதியில் உள்ள பெரும்பாலான கிராமப் புற மக்கள் ஐக்கிய தேசியக் கட்சிக்கு ஏற்பட்ட அபசகுனமாகவே எண்ணுகின்றனர். இதனால் ஏற்பட்ட கூடிய பாதகமான நிலைமையைத் தவிர்ப்பதற்காகவே அந்தச் சம்பவம் ஒரு சதிச் செயல் என கூறி விசாரணைகளுக்கு அரசு உத்தரவிட்டது என 'ராவய' பத்திரிகையின் ஆசிரியர் விக்டர் ஐவன் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

மேடை சரிந்து விழுந்த சம்பவம் ஒரு சதிச் செயல் என்று அந்தக் கட்டத்தை ஒழுங்கு செய்திருந்தவரான அமைச்சர் நந்தா மதியூ தெரிவித்து விட்ட பின்னரும்—

அது குறித்து விசாரணை நடத்த அரசு உத்தரவிட்டிருப்பது மக்கள் மத்தியில் எழுந்துள்ள இந்த அபசகுன உணர்வை நீக்குவதற்கே என்றும் அவர் கூறியுள்ளார். (ஐ-6)

## வடமராட்சி

## விவசாய பயிற்சிப் பாசறை கிளிநொச்சியில் நடந்தது

வட தமிழீழ விவசாய விஞ்ஞானிகளை ஒருங்கிணைத்து தமிழீழத்தின் விவசாயக் கொள்கைகளை அமுல்படுத்தும் விவசாய போதனாசிரியர்களுக்கான பயிற்சிப் பாசறை ஒன்று அண்மையில் கிளிநொச்சியில் நடத்தப்பட்டது.

தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம் விவசாய திணைக்களத்தின் விரிவாக்கப் பகுதி மற்றும் வாழ்வக்கலைக்கழக விவசாய பீடத்தினரும் இணைந்து நடத்திய இப் பயிற்சிப் பாசறையில் வன்னி மற்றும் வாழ். மாவட்டங்களில் கடமையாற்றும் விவசாய போதனாசிரியர்கள், விவசாய உத்தியோகத்தர்கள், உதவி விவசாய அலுவலர்கள் ஆகியோர் பங்கு பற்றினர்

இப் பயிற்சிப் பாசறையின் போது — ஒவ்வொரு விவசாய போதனாசிரியரும் தங்கள் பகுதிகளுக்கான வேளாண்மைத் திட்டங்களை பயிர் செய்கை வாரியாகவும், மாவாரியாகவும், கிழமைவாரியாகவும் தயாரித்து முன்கூட்டியே திட்டமிட்டு செயற்படுத்த வேண்டியதற்கான பயிற்சியும் வழங்கப்பட்டது. இதன் மூலம் எதிர்காலத்தில் விவசாயத்துறையில் பாரிய மாற்றங்களை ஏற்படுத்தி விவசாயக்காரர்கள் பயனடையவுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகிறது. (எ)

## புலிகளின் குரல் வானொலியில்

25 — 07 — 1994

திங்கள் இரவு

★ 8-01 — தனிர்கள்
★ 8-20 — செய்திச்சரம்
★ 8 30 - செய்திகள்
★ 8-40 — வெளிக்கள படுகொலை, இயலுமி 1 நடவடிக்கை நினைவாக சிறப்பு நிகழ்ச்சி. "வெட்டி வீழ்த்தவோம் பகையை"

26 — 07 — 1994

செவ்வாய் காலை

★ 7-03 — மாவீர வணக்கம்
★ 7-15 — இன்றைய தாரகை
★ 7-30 — செய்திகள்
★ 7-35 — பத்திரிகைச் செய்திகள்
★ 8-40 — தாயகப் பாடல்கள்

## மருந்து வகைகள் விநியோகம்

யாழ். மாவட்டத்தில் உள்ள அரசினர் வைத்திய சாலைகளுக்கு 3 ஆவது காலாண்டுக்குரியமருந்து வகைகளை யாழ் பிராந்திய சுகாதார நிலையங்கள் விநியோகித்து வருகிறது.

இம்மருந்து வகைகள் அண்மையில் கப்பல் மூலம் யாழ். சுகாதாரத் திணைக்களத்திற்கு எடுத்து வரப்பட்டன. (எ-17)

## தென்பகுதித் தேர்தல்:

## கிராமங்களில் குண்டர்கள்; எதிரணியினர் மீது ஆவேசம்

கொழும்பு, ஜூலை 25

கிராமப்புறங்களில் பொது மக்கள் ஐக்கிய முன்னணியின் ஆதரவாளர்களை அச்சுறுத்துவதில் அரசியல் குண்டர் குழுக்கள் ஈடுபட்டிருப்பதாகக் குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

எதிர்வரும் பொதுத் தேர்தலில் போட்டியிடுகின்ற செல்வாக்கு மிக்க அரசியல் வாதிகளின் ஆதரவும் தந்திரமெய்ப்பாடுகளுமே இந்த அச்சுறுத்தல் நடவடிக்கையில் ஈடுபட்டிருப்பதாக பொதுமக்கள் ஐக்கிய முன்னணித் தலைவர்கள் குற்றஞ்சாட்டியுள்ளனர்.

இக் குண்டர் குழுக்களுக்கு ஆயுதங்களும் வெடிமருந்துகளும் தொடர்பு சாதனங்களும் தங்கு தடையின்றி கிடைத்து வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இக்குண்டர்களின் தாக்குதலுக்கு ஆளாகி பொதுமக்கள் ஐக்கிய முன்னணி ஆதரவாளர் ஒருவர் இறந்து விட்டார். ஆலங்கேணி பொத்தபிரிவு. ஆர். ஸ்ராஸ்லி பெரேராவேடோ. தாக்குதல் நடத்தியவர்கள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டாம் என்று செல்வாக்குமிக்க அரசியல் வாதி ஒருவர் பொலீஸாரை எச்சரிக்கை செய்தார் என்றும் முன்னணித் தலைவர்கள் தெரிவித்தனர்.

ஆயுதங்களிந்த குண்டர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கமுடியாத நிலையில் பொலீஸார் இருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (எ)

## கட்டுப்படையினரின் ரோந்து நடவடிக்கை அதிகரிப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 24

யாழ். குடாநாட்டின் கடற்பகுதிகளில் ஸ்ரீலங்கா கடற்படையினரின் ரோந்து நடவடிக்கைகள் அதிகரித்துள்ளன.

அத்துடன் கடந்த பல நாட்களாக குடாநாட்டின் பல்வேறு பகுதிகளிலும் கடற்படையினர் பீரங்கித் தாக்குதல்களை நடத்தி வருகின்றனர்.

கடற்படையினரின் நடமாட்டமும் பீரங்கித் தாக்குதலும் வடமராட்சிக்கிழக்கு பகுதியில் அதிகமாகவுள்ளன. 21 ஆம் திகதி நண்பகல் வேளையில் காரைநகர் கடற்பகுதியை இருந்து கடற்படையினர் சரமாரியாக பீரங்கித் தாக்குதல்களை நடத்தினர்.

## ஒப்பந்தங்கள் வெளியாகின

பொதுமக்கள் ஐக்கிய முன்னணி, ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸுடனும் முன்னாள் ராஜாங்க அமைச்சர் எம்.எஸ். செல்லச்சாமியுடனும் செய்துள்ள ஒப்பந்தங்களை, முன்னணியின் பொதுச் செயலாளர் டி. எம். ஜயரத்தினா நேற்று வெளியிட்டார். (எ-6)

## தென்மராட்சிப் பகுதியில் தென்னை நாற்று உற்பத்தி

3 ஆயிரத்து 300 தென்னம் நாற்றுக்களைக் கொண்ட நாற்றுமேட்டுகள் ஒவ்வொரு தென்மராட்சி புனரமைப்பு பகுதியில் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தினர் அமைத்துள்ளனர்.

யாழ். மாவட்டத்தில் தென்னை செய்கையை அபிவிருத்தி செய்யும் நோக்கில் முன்னோடி நடவடிக்கையாகவே இராமிய மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் இவ் நாற்றுக்கள் உற்பத்தி செய்யப்பட்டுள்ளன.

இவ்வாறு உற்பத்தி செய்யப்பட்ட நாற்றுகளை பொதுமக்களுக்கு நியாய விலைக்கு வழங்குவதற்கான நடவடிக்கைகள் தேற்கொள்ளப்பட்டு வருகிறது. (எ)

# எந்தக் கட்சி ஆட்சிக்கு வந்தாலும் முடிவு இராணுவத் தீர்வாக இருக்கும்!

## அரசண்ணா பேச்சு

யாழ்ப்பாணம், ஜூலை 25

நடைபெறப் போகும் நாடாளுமன்றத் தேர்தலை முன்னிட்டு ஸ்ரீலங்காவின் இரண்டு பெரிய கட்சிகளும் வெளியிட்ட தேர்தல் விஞ்ஞாபனத்தில் தமிழர் பிரச்சினைக்கு எந்தவித உறுதியான தீர்வுகளையும் முன்வைக்கவில்லை.

ஆட்சிக்கு வரப்போகும் எந்தக் கட்சியின் முடிவும் இராணுவத் தீர்வாகத்தான் இருக்கப் போகிறது. இதற்கு நாம் எம்மைத் தயார்படுத்திக் கொள்ள வேண்டும்.

இவ்வாறு தெரிவித்தார் தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல் துறை நடுவப் பணியகத்தைச் சேர்ந்த திரு. அரசண்ணா. கடந்தபுதன்கிழமை மாலை நடைபெற்ற நாவற்குழி வைவிதா குடியிருப்பில் உள்ள சிறுவர் போசாக்கு மாரமமிப்பு பூங்காவின் முதலாண்டு நிறைவு விழாவில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

நாவற்குழி வைவிதா குடியிருப்பு பொறுப்பாளர் திரு. தேவன் தலைமையில் நடைபெற்ற இவ் விழாவில் திரு. அரசண்ணா தொடர்ந்து உரையாற்றுகையில் கூறியதாவது:

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் துணைத் தலைவி திருமதி சந்திரிகா தனது கட்சி ஆட்சிக்கு வந்தால் வடக்கு-கிழக்கு இணைக்கப்படும் என்கிறார். ஆனால் அவரது தகவாரி சிறிமாவோ கூறுகிறார். வடக்கு-கிழக்கு இணைப்பே இல்லை என்று

இதே போன்று ஆளும் ஐக்கிய தேசியக் கட்சியும் வெடிக்கையான தீர்வை முன்வைத்துள்ளது. முடிந்தால் அரசியல் தீர்வு இல்லையேல் இராணுவத் தீர்வு என்று. இதற்கு ஒரு தேர்தல் விஞ்ஞாபனம் தேவையா?

அரசியல் தீர்வுகளாக இவர்கள் அவர்களுக்கு ஒரு கொள்கையும் மேடைகளுக்கு ஒரு கொள்கையும் கொண்டவாறு அரசாட்சி உள்ளது. இதற்கு தமிழர்களும் தாங்களாகவே ஒரு முடிவு எடுக்கும் இடையில் யுத்த ஏதும் நடந்தால் அது. வெளிநாட்டவர்களின் முன்னேயே நடக்கும்.

எதிர்வரும் பொதுத் தேர்தலில் தமிழ்த் தேசிய இனத்தை ஸ்ரீலங்கா அரசு பேடித்தனமான, கையாலாகாத இனமாக ஆக்கிக் காண்டிருக்கிறது: யாழ். மாவட்டத்திலுள்ள மக்களுக்கே தெரியாத 10 பிரதி நிதிகள் நாடாளுமன்றத்திற்கு போகப் போகிறார்கள். இந்த 10 பிரதிநிதிகளுக்கும் யாழ்ப்பாணத்தில் மக்கள் என்ன நிலையில் இருக்கிறார்கள் என்பதாவது தெரியாது

10 பிரதிநிதிகளையும் தெரிவு செய்வதற்கு இராணுவத்தினர் தம்வசமுள்ள வயது போனவர்களையும் பயன்படுத்தப் போகிறார்கள்.

இன்று தேர்தலை நடத்தி [illegible] பிரதிநிதிகளும் இருக்கிறார்கள் [illegible] வாத அரசாட்சி உள்ளது. இதற்கு தமிழர்களும் தாங்களாகவே ஒரு முடிவு எடுக்கும் இடையில் யுத்த ஏதும் நடந்தால் அது. வெளிநாட்டவர்களின் முன்னேயே நடக்கும்.

எதிர்வரும் பொதுத் தேர்தலில் தமிழ்த் தேசிய இனத்தை ஸ்ரீலங்கா அரசு பேடித்தனமான, கையாலாகாத இனமாக ஆக்கிக் காண்டிருக்கிறது: யாழ். மாவட்டத்திலுள்ள மக்களுக்கே தெரியாத 10 பிரதி நிதிகள் நாடாளுமன்றத்திற்கு போகப் போகிறார்கள். இந்த 10 பிரதிநிதிகளுக்கும் யாழ்ப்பாணத்தில் மக்கள் என்ன நிலையில் இருக்கிறார்கள் என்பதாவது தெரியாது

10 பிரதிநிதிகளையும் தெரிவு செய்வதற்கு இராணுவத்தினர் தம்வசமுள்ள வயது போனவர்களையும் பயன்படுத்தப் போகிறார்கள்.

இன்று தேர்தலை நடத்தி [illegible] பிரதிநிதிகளும் இருக்கிறார்கள் [illegible] வாத அரசாட்சி உள்ளது. இதற்கு தமிழர்களும் தாங்களாகவே ஒரு முடிவு எடுக்கும் இடையில் யுத்த ஏதும் நடந்தால் அது. வெளிநாட்டவர்களின் முன்னேயே நடக்கும்.

எதிர்வரும் பொதுத் தேர்தலில் தமிழ்த் தேசிய இனத்தை ஸ்ரீலங்கா அரசு பேடித்தனமான, கையாலாகாத இனமாக ஆக்கிக் காண்டிருக்கிறது: யாழ். மாவட்டத்திலுள்ள மக்களுக்கே தெரியாத 10 பிரதி நிதிகள் நாடாளுமன்றத்திற்கு போகப் போகிறார்கள். இந்த 10 பிரதிநிதிகளுக்கும் யாழ்ப்பாணத்தில் மக்கள் என்ன நிலையில் இருக்கிறார்கள் என்பதாவது தெரியாது

10 பிரதிநிதிகளையும் தெரிவு செய்வதற்கு இராணுவத்தினர் தம்வசமுள்ள வயது போனவர்களையும் பயன்படுத்தப் போகிறார்கள்.

இன்று தேர்தலை நடத்தி [illegible] பிரதிநிதிகளும் இருக்கிறார்கள் [illegible] வாத அரசாட்சி உள்ளது. இதற்கு தமிழர்களும் தாங்களாகவே ஒரு முடிவு எடுக்கும் இடையில் யுத்த ஏதும் நடந்தால் அது. வெளிநாட்டவர்களின் முன்னேயே நடக்கும்.

எதிர்வரும் பொதுத் தேர்தலில் தமிழ்த் தேசிய இனத்தை ஸ்ரீலங்கா அரசு பேடித்தனமான, கையாலாகாத இனமாக ஆக்கிக் காண்டிருக்கிறது: யாழ். மாவட்டத்திலுள்ள மக்களுக்கே தெரியாத 10 பிரதி நிதிகள் நாடாளுமன்றத்திற்கு போகப் போகிறார்கள். இந்த 10 பிரதிநிதிகளுக்கும் யாழ்ப்பாணத்தில் மக்கள் என்ன நிலையில் இருக்கிறார்கள் என்பதாவது தெரியாது

10 பிரதிநிதிகளையும் தெரிவு செய்வதற்கு இராணுவத்தினர் தம்வசமுள்ள வயது போனவர்களையும் பயன்படுத்தப் போகிறார்கள்.

இன்று தேர்தலை நடத்தி [illegible] பிரதிநிதிகளும் இருக்கிறார்கள் [illegible] வாத அரசாட்சி உள்ளது. இதற்கு தமிழர்களும் தாங்களாகவே ஒரு முடிவு எடுக்கும் இடையில் யுத்த ஏதும் நடந்தால் அது. வெளிநாட்டவர்களின் முன்னேயே நடக்கும்.

எதிர்வரும் பொதுத் தேர்தலில் தமிழ்த் தேசிய இனத்தை ஸ்ரீலங்கா அரசு பேடித்தனமான, கையாலாகாத இனமாக ஆக்கிக் காண்டிருக்கிறது: யாழ். மாவட்டத்திலுள்ள மக்களுக்கே தெரியாத 10 பிரதி நிதிகள் நாடாளுமன்றத்திற்கு போகப் போகிறார்கள். இந்த 10 பிரதிநிதிகளுக்கும் யாழ்ப்பாணத்தில் மக்கள் என்ன நிலையில் இருக்கிறார்கள் என்பதாவது தெரியாது

10 பிரதிநிதிகளையும் தெரிவு செய்வதற்கு இராணுவத்தினர் தம்வசமுள்ள வயது போனவர்களையும் பயன்படுத்தப் போகிறார்கள்.

இன்று தேர்தலை நடத்தி [illegible] பிரதிநிதிகளும் இருக்கிறார்கள் [illegible] வாத அரசாட்சி உள்ளது. இதற்கு தமிழர்களும் தாங்களாகவே ஒரு முடிவு எடுக்கும் இடையில் யுத்த ஏதும் நடந்தால் அது. வெளிநாட்டவர்களின் முன்னேயே நடக்கும்.

(ஐ-4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குளத்துக்கு தேவை மழை
மழைக்கு தேவை மரவளம்

# அமைப்பாளர் பதவியிலிருந்து அமைச்சர் ரணசிங்க நீக்கம்

கொழும்பு, ஜூலை 24

கடுவெல தொகுதியின் ஐ. தே. க. பிரதம அமைப்பாளர் பதவியில் இருந்து ராஜாங்க அமைச்சர் ஏ. ஜே. ரணசிங்க இடை நிறுத்தம் செய்யப்பட்டுள்ளார்.

ஐ. தே. க. பொதுச் செயலாளர் டாக்டர் காமினி விஜேசேகர இடைநிறுத்தும் உத்தரவை கடந்த வாரம் பிறப்பித்தார் என்று தெரிவிக்கப்படுகிறது.

இந்த உத்தரவை ஏற்றுக் கொள்ள ராஜாங்க அமைச்சர் ரணசிங்க மறுத்துவிட்டார்.

தம்மை ஐ. தே. க. நிறைவேற்றுக் குழுவினர் மப்டுவே இடைநிறுத்தம் செய்ய முடியும் என்று அவர் கூறினார்.

ஐ. தே. க. நிறைவேற்றுக் குழுவின் முடிவுக்கு ஏற்ப கடுவெல அமைப்பாளராக அப் போதைய ஜனாதிபதி பிரேமதாஸா தம்மை நியமித்ததாக திரு. ரணசிங்க ஐ. தே. க. பொதுச் செயலாளர் டாக்டர் விஜேசேகராவுக்கு எழுதிய கடிதத்தில் தெரிவித்துள்ளார்.

"ஆகவே ஐ.தே.க. செயற்குழுவை கூட்டி சம்பிரதாயமாக என்மீது நடவடிக்கை எடுக்கப்படும் வரை கடுவெல தொகுதி பிரதம அமைப்பாளராக நான் தொடர்ந்து பணி புரிவேன்"— என்றும் அவர் தமது கடிதத்தில் தெரிவித்துள்ளார். கடிதத்தின் பிரதிகளை அவர் ஜனாதிபதி, பிரதமர் ஆகியோருக்கும் அனுப்பி வைத்திருக்கிறார்.

கடந்த நாடாளுமன்றத்தில் கடுவெல தொகுதியைப் பிரதிநிதித்துவப்படுத்திய ரணசிங்க காலை இம்முறை வேட்பாளராக நியமிக்க ஐ. தே. க. தலைமைப்பீடம் மறுத்து விட்டது. (இ-எ)

## ஐ. தே. க. வேட்புமனுவில் இருந்து என் பெயரை நீக்கியவரை பத்தினியம்மன் தண்டிக்கும்

### அமைச்சர் ரணசிங்க சாபம்

எதிர்வரும் பொதுத் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர் பட்டியலில் இருந்து எனது பெயரை கவிழ்த்தியவர்களை நான் வணங்கும் பத்தினித் தெய்வம் தண்டிக்கும்: ராஜாங்க அமைச்சர் ஏ. ஜே. ரணசிங்க நவரமுவில் நடந்த பிரியாவிடைப் பொதுக்கூட்டம் ஒன்றில் பேசுகையில் முன்னாள் வாறு சாபமிட்டார்.

"என்னை நீக்கியதன் மூலம் எனக்கு எதிராகச் சதி செய்தவர்கள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர். எஞ்சம் வாங்குபவர்கள் பொய்யர்கள், பாரகூட் மூலம் வந்து குதித்தவர்கள் ஆகியவர்களுக்கு மக்கள் தேர்தலில் நல்ல பாடம் படிப்பிப்பர்" என்றும் அவர் கூறினார். (எ)

## வெவ்வேறு கட்சிகளில் போட்டியிடும் இரு சகோதரர்களின் ஆதரவாளர்கள் மோதல்

### கம்பஹா மாவட்டத்தில் சம்பவம்

கம்பஹா மாவட்டத்தில் வெவ்வேறு கட்சிகளின் சார்பில் போட்டியிடும் இரு சகோதரர்களின் ஆதரவாளர்கள் கைகலப்பில் ஈடுபட்ட சம்பவம் மினுவாங்கொடையில் இடம்பெற்றுள்ளது.

இம் மோதலில் காயமடைந்த மினுவாங்கொட பிரதேசபை உறுப்பினர் ஒருவர் நீர்கொழும்பு ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டார்.

தேர்தல் சுவரொட்டிகளை ஒட்டுவது தொடர்பான தகராறே மோதலுக்குக் காரணம் என்று தெரிவிக்கப்பட்டது.

ஆளும் கட்சியின் சார்பில் போட்டியிடும் அமைச்சர் விஜயபால மெண்டிஸின் ஆதரவாளர்களும், அமைச்சரின் தம்பியும் பொதுமக்கள் ஐக்கிய முன்னணியின் வேட்பாளருமான நந்தன மெண்டிஸின் ஆதரவாளர்களுமே இம் மோதலில் சம்பந்தப்பட்டவர்கள் என்று தெரிவிக்கப்பட்டது. (எ)

## மரண அறிவித்தல்கள்

### தம்பிப்பிள்ளை காங்கேசு

(இளைப்பாறிய உதவியோகத்தர் – விநியோகிப்பு அதிகாரசபை யாழ்ப்பாணம், கலுவனியா)

உரும்பராய் தெற்கைச் சேர்ந்த தம்பிப்பிள்ளை காங்கேசு 23 – 07 – 94 அன்று காலமாகிவிட்டார். அன்னார் திருமதி பேரம்மாவின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற தம்பிப்பிள்ளை - பொன்னம்மாவின் அருமை மகனும், செல்வி ஜெயந்தி (விநியோகிப்பு அதிகாரசபை வவுனியா), செல்வன் தயாபரன் (லண்டன்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், தவமணி இராசையா (அவுஸ்திரேலியா), நாகம்மா கந்தையா, பரமேஸ்வரி இராசா ஏர, பொற்கொடி ஜெகநாதன், கணேஸ்வரி நவரத்தினம் (லண்டன்) ஆகியோரின் சகோதரனும், காலஞ்சென்ற முத்துத்தம்பி – தங்கமுத்துவின் மருமகனும், காலஞ்சென்ற முத்துத்தம்பி அருணசலம், மயிலமணி நடராசா, புவனேஸ்வரி சபாநாதன் ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

இறுதிக்கிரியைகள் இன்று திங்கட்கிழமை 25 – 07 – 94 காலை அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனத்திற்காக மு. ப 10 00 மணியளவில் உரும்பராய் வேம்படி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

தகவல்:

ச. க. சபாநாதன்

"அருணா"
பலாலி வீதி.
உரும்பராய் தெற்கு.
உரும்பராய்.

(32076)

மெலிஸைக்கலைஞர் பகத்சிங் அரசு

### ஏ.ஆர். ஸ்ரீகிருஷ்ணமூர்த்தி

(யாழ். மாநகரசபை ஊழியர்)

மெலிஸைக் கலைஞர், பகிரிப்பாடல் அரசு ஏ. ஆர். சிறிகிருஷ்ணமூர்த்தி அவர்கள் காலமாகிவிட்டார்.

இவர் இந்திராணியின் அன்புக் கணவரும் தர்மசீலன் [சிறிலண்ணன் இன்சுறீஸ்] குணசீலன் [சுங்கர் மருந்தகம்], மாலதி, ஜெயசீலன் (கொழும்பு), ஞானசீலன் [மாருதி விடியோ விஷன்] ஆகியோரின் அன்புத் தந்தையும், சிவகௌரி, சங்கர், சிவயோகரன், சியாமளா ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் புகழுடல் இன்று (25-07-94) மாலை 3 மணிக்கு 19/1, B. A தபால் ஒழுங்கை, வண்ணார்பண்ணை என்ற முகவரியிலுள்ள அவரது இல்லத்திலிருந்து கோம்பயன் மணல் மயானத்திற்கு தகனக்கிரியைகளுக்காக எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உறவினர், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்
குடும்பத்தினர்.
மாருதிவிடியோ பண்ணன்

(ஈ-8785)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம், நாவலர் வீதி, 292/2 இலக்கத்திலுள்ள அச்சகத்தில் 25 - 07 - 1994 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

## விரச்சாவு

யாழ். மாவட்டத்தில் நேற்று முன்தினம் இடம் பெற்ற எதிர்பாராத விபத்துச் சம்பவம் ஒன்றில் விடுதலைப் புலிகள் இயக்கப் போராளியான கப்டன் முத்து அல்லது அழகமுத்து (செல்வையா தவச்செல்வம் — இணுவில் தெற்கு) வீரச்சாவடைந்தார்.

★ ★ ★

திருமலை வெருகல் முகத்துவாரத்தில் கடந்த 18 ஆம் திகதி இராணுவத்தினர் நடத்திய தாக்குதலில் விடுதலைப் புலிகள் இயக்க ஆதரவாளரான கித்திரவேல் சிவலிங்கம் [மாவடிச்சேனை] வீரச்சாவடைந்தார்.

★ ★ ★

முல்லை மாவட்டத்தைச் சேர்ந்த துணைப்படை வீரரான வீரவேங்கை ஆறுமுகம் தவராசா [அனப்பில்] கடந்த 20 ஆம் திகதி சுகவீனம் காரணமாக வீரச்சாவடைந்தார். [ஐ]

## பொ. ம: ஐ. மு.

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

சியாக, நாளை என்ன நடக்குமோ என்ற நிலையில் அஞ்சி அஞ்சி வாழவேண்டிய நிலைக்கு எம்மைத்தள்ளி விட்டது இந்த அரசு. இந்த அரசின் பயங்கரவாத நடவடிக்கைகளால் சிங்கள, தமிழ், முஸ்லிம் மக்கள் படுகொலை செய்யப்பட்டதை எம்மால் மறந்து விடமுடியுமா?

தமிழ் மக்களின் பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காணப்படவேண்டும் என்று கோரிக்கை விடுத்த போதெல்லாம் அதனை தட்டிக் கழித்துவிட்டது இந்த அரசு.

17 வருடங்களாக தமிழரின் பிரச்சினைக்குத் தீர்வு காண முடியாதவர்கள், "மீண்டும் எமக்கு வாக்களியுங்கள், பிரச்சினையை தீர்க்கின்றோம்" என்று கூறுவதில் என்ன நியாயம் இருக்கிறது?

வடக்கு, கிழக்குப் பிரச்சினைக்கு அரசியல் ரீதியில் பேச்சுவார்த்தை நடத்தாக் தான் தீர்வுகாண முடியும் என்பது எமது கொள்கை. இராணுவ ரீதியில் தீர்வுகாண முயல்வது மேலும் அழிவுகளைக்கொண்டு வரும்.

இந்த அரசாங்கம் 1977 ஆம் ஆண்டு பதவிக்கு வந்த ஒரு சில தினங்களில் தமிழ் மக்களுக்கு எதிராகக் கொடூரமான வன்செயலை கட்டவிழ்த்து விட்டது. 1981 இலும் அதே நிலைதான் இதோடு நின்றார்களா? இல்லை. 1983 ஜூலை இனக்கலவரம் எங்களுக்கு நினைவிருக்கும். இதே மாதம் தான். நாம் பட்ட துன்பம், துயரங்களை, உயிருக்கு அஞ்சி ஓடி ஒளிந்ததை, உடைமைகள் சேதமாக்கப்பட்டு, உடல்கள் உயிருடன் கொளுத்தப்பட்டதை மறக்க முடியுமா? அன்றைக் மறைக்கத்தான் முடியுமா?

ஜூலைக் கலவரம் இன்றைய அரசாங்கத்தின் அமைச்சர்களினால் திட்டமிடப்பட்ட ஒரு வன்செயல் என்பதை மறக்க முடியுமா?

யாழ். நூலகநிலையை எரிப்புக்கு யார் பொறுப்பு? இவர்களை நம்மால் நம்பமுடியுமா?

1977 ஆம் ஆண்டு தாமிஷ்ட போர்வையில் வந்த தலைவர்கள் இன்றும் உலா வருகிறார்கள் அவர்களுக்கு வாக்களிப்பது நமக்கு நாமே குழிதோண்டி கொள்வதற்கு ஈடாகாதா?

இன்னும் ஐந்து வருடங்களுக்கு இதே அரசினை ஆட்சியில் அமர்த்துவதாக் இன்னும் கூடுதலான அழிவுகள் தானே ஏற்படும்.

இந்த அரசுக்கு ஆட்சிக்கு வருவதில் உள்ள ஆர்வம் தமிழ் மக்களின் பிரச்சினையைத் தீர்ப்பதில் இல்லை.

தலைசிறந்த கல்விமான்கள், அறிஞர்களை தூசுபோல் தூக்கியெறிந்தது இந்த அரசதான்.

இனவாதக் குழுக்களை அரவணைத்துக் கொண்டிருப்பது யார்? இந்த அரசதான் இந்த இனவாதக் குழுக்கள் அரசியல் தீர்வை விரும்புகின்றார்களா?

தமிழ் மக்களின் நியாயமான உரிமைகளை வழங்க இந்த அரசினை இவர்கள் அனுமதிப்பார்களா?

இனவாதச் சக்திகளின் புகலிடமாகிவிட்ட இந்த அரசினால் வடபகுதி மக்கள் மாத்திரம் அல்ல, கொழும்பிலும் நாட்டின் ஏனைய இடங்களிலும் வாழும் தமிழ்பேசும் மக்களின் பாதுகாப்பையும் உறுதி செய்ய முடியுமா? இந்த சந்தர்ப்பவாதிகளால் சமத்துவத்தை உறுதிப்படுத்த முடியுமா?

கம்போடியா [illegible] இந்நிலை இலங்கை, கனசாரா இலங்கையை, கலகிக் கூடாகவா அகதி முகாம்களாக்கி' அதிகிருந்து வாக்களிக்கக் கோரும் நிலைக்கு கம்போடியாவில் கூட நடக்கவில்லை. இதுதான் இன்றைய நிலைமை. இந்த நிலைமையை மாற்ற வேண்டும்.

எல்லாரும் எல்லாமும் பெற வேண்டும். நாட்டு மக்கள் அனைவரும் தலை நிமிர்ந்து வாழவேண்டும். இதற்காக பொதுமக்கள் ஐக்கிய முன்னணி நிபந்தனைகளை முன் வைத்துள்ளது

ஒருவரோ ஒன்றுவாழ, ஒரு கோடிப் பேர் மாண்டுபோக வேண்டுமா?

அதிகாரத்தைப் பயன்படுத்தி மக்களை இன்னலுக்குள்ளாக்கும் போக்கை நீக்குவோம்.

இன்று எங்கு பார்த்தாலும் லஞ்சம், ஊழல்.

சர்வாதிகார ஜனாதிபதி ஆட்சி முறையை நீக்குவோம். நாட்டில் அதிகாரமிதை மக்கள் வசம் வழங்குவோம்.

### பேச்சு மூலம் அரசியல் தீர்வு

தமிழ் மக்களின் பிரச்சினைக்கு அரசியல் ரீதியான தீர்வை பேச்சுவார்த்தை மூலம் அடைய உழைப்போம்.

யாழ்ப்பாணத்துக்கு பொருள்கள் கொண்டு செல்வதற்கு விதிக்கப்பட்டுள்ள தடையை நீக்கி, போக்குவரத்து சேவை ய ஏற்படுத்துவோம். அவசரகாலச் சட்டத்தினால் வந்து செய்யப்பட்டவர்களை விடுதலை செய்வோம்.

கடந்த காலங்களில் இனப்படுகொலை புரிந்தவர்களை கண்டு பிடித்து நீதியின் முன் நிறுத்துவோம்.

தற்போதைய இருட்டறைச் சட்டத்துக்கு இடமளிக்கமாட்டோம்; வறியமக்களை பாதுகாப்போம்; வறுமைப் பிடியில் இருந்து அவர்களை விடுவிக்க ஏழை அமைப்போம்.

பல்கலைக்கழக மாணவர்களின் நியாயமான கோரிக்கைகளை நிறைவேற்றுவோம்.

இந்த நாடு இனியும் யுத்த நிலையில் இருக்க முடியாது. யுத்தத்துக்கு முடிவு கட்டி சுதந்திர முகாம்களை அகற்றி அனைவரும் மகிழ்ச்சியுடன் வாழச் செய்வோம்.

எந்தத் தமிழ்க் குழுவையும் நாம் எதிர்க்கவில்லை. தமிழர்களின் பிரச்சினைக்கு தீர்வு காண்பதில் அனைவரையும் அழைத்துச் செல்வோம்.

வடக்கில் உள்ள தமிழ்ப் புதல்வர்களுடன் கலந்துரையாடுவோம். தமிழ் மக்கள் நாட்டின் எந்தப் பகுதியிலும் நிம்மதியாக வாழும் சூழ்நிலையை ஏற்படுத்துவோம்.

நாம் எவருடனும் காழ்ப்புணர்ச்சியோ விளையாட்டோ மக்களுக்கு கடந்த 17 ஆண்டுகாக இருண்ட வாழ்வில் ஒளி பெற்றவர்களே எமது குறிக்கோள்.

காலஞ்சென்ற விஜயகுமாரணதுங்கா நல்லூருக்குச் சென்று பேசுகிக்க நடத்தினார். தமிழ்மக்களின் அபிமானம் அவர் பெற்றார். சிறிமாவின் உரிமைகள் பறிக்கப்பட்ட சமயம் வடமாகாண மக்கள் அவருக்கு ஆதரவளித்தனர்.

தமிழ் மக்களின் அன்புக்கு அடிமையானவர்கள் நாம் நீங்கள் காட்டிய அன்புக்கும் ஆதரவுக்கும் நன்றிகூடன் செலுத்தக்கூடிய வகையில் உங்களின் பிரச்சினைக்குத் தீர்வு காணக்கூடிய வகையில் பொதுமக்கள் ஐக்கிய முன்னணிக்கு ஆதரவளியுங்கள். உங்களின் ஆதரவு எங்களைப் பலப்படுத்தும். அந்தப்பலம் [illegible] தீர்வு காண உதவும். இதுதான் [illegible] நான் கேட்கிறார். (உ-எ)

## ரூ. 350 கோடிக்கு ஆயுதங்கள் வாங்க ரஷ்யாவுடன் காபந்து அரசு ஒப்பந்தம்

### ஆட்சிக்கு வந்ததும் ரத்துச் செய்வோம் என்கிறார் க. க. பிரமுகர்

கொழும்பு, ஜூலை 25

இலங்கை ரஷ்யாவுடன் 350 கோடி ரூபா ஆயுதக் கொள்வனவு ஒப்பந்தம் ஒன்றைச் செய்துள்ளது. காபந்து அரசாங்கம் ஒன்று இத்தகைய ஒப்பந்தங்களைச் செய்வது சட்டவிரோதமானது ஆகும்.

சிறீலங்கா சுதந்திரக் கட்சி பொதுச் செயலாளர் தர்மசிறி சேனநாயக்க கடந்த வாரம் நடைபெற்ற செய்தியாளர் மாநாடு ஒன்றில் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து கூறியதாவது:

அரசாங்கத்தின் சார்பில் பாதுகாப்பு அமைச்சின் அதிகாரிகளும் இராணுவ உயரதிகாரிகளும் இந்த ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டுள்ளனர். இந்த ஒப்பந்தம் சிங்கப்பூர் கம்பெனியான "குளோபல் மொமாடுஸ் டெக்னொலாஜி கம்பெனி" மூலமாகச் செய்து கொள்ளப்பட்டுள்ளது. டி. எம். பி. - 2 ரக யுத்த டாங்கிகளும், 80 கவச வாகனங்களும் இந்த ஒப்பந்தத்தின் மூலம் இறக்குமதியாகும்.

தமது அரசாங்கம் பதவிக்கு வந்தால் இந்தச் சட்டவிரோத ஒப்பந்தம் ரத்துச் செய்யப்படும் என்றும் திரு. சேனநாயக்க கூறினார். (எ)

## பொ. ஐ. மு- முஸ்லிம் காங்கிரஸ்

## தேர்தல் உடன்பாடு இவ்வாரம் மகாநாயக்கர்களிடம் கையளிப்பு

கொழும்பு, ஜூலை 25

பொதுமக்கள் ஐக்கிய முன்னணியுடன் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் செய்து கொண்டுள்ள தேர்தல் உடன்பாடு இவ்வாரம் மகாநாயக்கர்களிடம் கையளிக்கப்படவிருப்பதாக அறிவிக்கப்படுகிறது.

கண்டியில் அஸ்கிரிய பீடாதிபதி பலிப்பான சந்தானந்த தேரரைச் சந்தித்த போது, ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் எம். எச். எம். அஷ்ரப் இந்த உறுதி மொழியை நேரில் வழங்கினார்.

அஸ்கிரிய மகாநாயக்க தேரர்களிடம் சமர்ப்பிக்கப் படவிருப்பதாக அறிவிக்கப்படுகிறது.

இந்த உடன்பாடு தொடர்பாகத் தாம் விடுத்தவாறு மக்கள் ஐக்கியமுன்னணியின் தலைவர் தினேஷ் குணவர்த்தனா விடமிருந்து பதில் கிடைப்பதில் ஏற்பட்டுள்ள தாமதத்தினால்தான் உடனடியாக உடன்பாட்டின் பிரதியைச் சமர்ப்பிக்க முடியாதிருப்பதாகவும் அவர் மகாநாயக்கரிடம் தெரிவித்தார். (எ)

## பொலன்னறுவ வன்செயல்கள்

### 2 பொலீஸ் அதிகாரிகள் உடனடியாக இடமாற்றம்

தேர்தல் நியமன நிகழ்ந்த பொலன்னறுவை மாவட்டம், பக்கமுன பிரிவில் ஏற்பட்ட அரசியல் வன்செயல்கள் தொடர்பாக, அம்மாவட்ட உதவிப் பொலீஸ் அதிபர் யு. ஏ. தர்மசேனா மற்றும் பக்கமுன பொலீஸ் நிலைய பொறுப்பதிகாரி டபிள்யு எம். ஆரியபால ஆகியோர் உடனடியாக இடமாற்றஞ் செய்யப்பட்டுள்ளனர்.

இம்மாவட்டத்தின் முன்னாள் அரச எம். பி. சந்திர சிறி சூரியாராச்சி ஜனாதிபதி செயலகத்தில் முறைப்பாடு செய்து தொடர்ந்து இந்த இடமாற்றங்கள் செய்யப்பட்டுள்ளன.

உதவிப் பொலீஸ் அதிபர் வவுனியாவுக்கும் பொறுப்பதிகாரி குணாரத்னாவுக்கும் இடமாற்றஞ் செய்யப்பட்டுள்ளனர்.

ஏற்கனவே இடம்பெற்ற வன்செயல்களில் இருவர் கொல்லப்பட்டனர். சுமார் நூறு பேர் வரை காயமடைந்தனர். 19 வாகனங்களும் சேதமாக்கப்பட்டன என்று தெரிவிக்கப்படுகிறது. [எ]

## பிரேமா, கூரே இல்லாத இடைவெளியை நிரப்பவே கொழும்பில் ரணில் போட்டி

### அமைச்சர் தகவல்

முன்னாள் ஜனாதிபதி பிரேமதாஸா கொலையுண்டதனாலும், அமைச்சர் சிறிலங்கா கூரே எதிர்வரும் தேர்தலில் போட்டியிடாததினாலும் ஏற்பட்ட இடைவெளியை நிரப்புவதற்கே பிரதமர் ரணில் விக்கிரமசிங்கா இம்முறை கொழும்பு மாவட்டத்தில் போட்டியிடுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இம்முறை கம்பஹா மாவட்டத்தில் தோல்வி அடைவார் என்ற அச்சம் காரணமாகவே தான் பிரதமர் கொழும்பில் போட்டியிடுகிறார் என்பது குறித்த கேள்விக்குப் பதிலளிக்கையில் அமைச்சர் ஜோசப் கைக்கல் பெரேரா முன்கண்ட தகவலை வெளியிட்டார்.

பிரதமர் ரணில் இன்று சர்வதேச் பிரமுகர் நிலைக்கு வந்துவிட்டார். அத்தகைய நிலையில் ஒரு முறை சிறிமாவோ தோற்றார். கனவிலே ஒரு முறை தோற்ற ஜே. ஆர். ஜெயவர்த்தனா கொழும்பில் போட்டியிட்டு ஜனாதிபதியானார். புவனேஸ்வரியில் போட்டியிட்டு தோல்வி அடைந்த பிரேமதாஸா கொழும்பு மத்தியில் போட்டியிட்டு ஜனாதிபதியானார். இதனால் அரசியல் வரலாறு என்றும் அவர் குறிப்பிட்டார். [எ]

## சுவடிகள் திணைக்களம் பன்முகப்படுத்தப்படுகிறது

தேசிய சுவடிகள் திணைக்களம் தனது நடவடிக்கைகளை பிரதேச மட்டத்திலே பன்முகப்படுத்தப்பட விருப்பதாக அறிவிக்கப்படுகிறது.

பொதுமக்களுக்கு சிறந்த சேவையை ஆவிக்குமுகமாக இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

ஆராய்ச்சி மற்றும் குறிப்புகள் எடுப்பதற்காகவும் பொது ஆவணங்களை எப்படி பாதுகாப்பது பற்றிய விவரங்களை பிரதேச செயலர்களுக்கு தேசிய சுவடிகள் திணைக்களம் அனுப்பி வைத்துள்ளது.

தற்போது பொது ஆவணங்கள் அனைத்தும் கொழும்பில் உள்ள தேசிய சுவடிகள் திணைக்களத்தின் தலைமை அலுவலகத்தில் வைக்கப்பட்டு பராமரிக்கப்படுகின்றன என்பது தெரிந்ததே.

திணைக்கள நடவடிக்கைகள் பன்முகப்படுத்தப்படுவதன் மூலம் சுவடிகள் திணைக்களத்திலுள்ள ஆவணங்களை பொதுமக்கள் சிரமமின்றி பயன்படுத்தக் கூடிய நிலை ஏற்படும் என்று தெரிவிக்கப்படுகிறது. (எ)

## பெண்ணின்...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

கொண்டிருந்ததாக—

பெண்மணி எழுப்பிய அவலக் குரல் "கொட்டடிப் பகுதிக்கு இராணுவம் வந்துவிட்டது" என்ற வதந்தியாக மாறியது

இந்த வதந்தியால் நாவலர்நூலகத் தொடக்கம் ஆவணக் கொட்டகை வரை உள்ள மக்கள் பதற்றத்துடன் ஓட்டம் போன நிலையில் ஒட்டமும் நடையுமாக விரைந்தனர்.

சில நிமிட நேரமாகவதந்தி பெரும் பரபரப்பையும் சந்தடி யையும் உண்டாக்கியது.

இவைகளால் சிலர் உண்மையை அறிந்து வருவதற்காகக் கொட்டடிப்பக்கம் சென்று பார்த்தபோதே அவலக்குரல் வதந்தியாக மாறியது தெரியவந்தது.

இராணுவம் வந்ததாகப் பரவிய தகவல் வதந்தி என்று தெரிந்ததும் மக்கள் தமது இருப்பிடங்களுக்குத் திரும்பினர்.

இந்தப் பரபரப்பு ஏற்படக் காரணமாக இருந்தவராக மயக்கமுற்ற இளம்பெண் பிள்ளை மரணமானார். இவர் கொட்டடி காரைநகர் வீதியில் வசித்த கனகு அஜராவினி (20 வயது) ஆவார். [ஈ-15-4]

## தேர்தலை...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

அபிப்பிராயங்களையும் பெற்றுக்கொள்ளலாம்

இதற்காக அவர்களுக்கென ஒரு செயலகம் ஏற்படுத்தப்படும்;

எவரது கட்டுப்பாட்டிக் இல்லாமல் சுயமாக அவர்கள் செயற்படுவர்.

அவர்கள் பொதுத் தேர்தலின் வாக்களிப்பு, வாக்குகள் எண்ணெடுப்பு என்பன சம்பந்தமாக ஒரு குறிப்பிட்ட காலவரையறைக்குள் அறிக்கை சமர்ப்பிப்பார்கள் — என்று தெரிவிக்கப்பட்டது. [உ-3]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org